R. No. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வே. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹூ வைகாசி-மீ 7-உ (20—5—1934) | மலர் 26.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

3 அணா வெளியீடுகள்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்:— இந்நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது.

பிரபஞ்ச உற்பத்தி:— இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

பிரகிருதிவாதம்:— இந்நூலில் கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் அவசியத்தையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

வெ. ரா. சொற்பொழிவு
விலை அணா 2.

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு
விலை அணா 2.

சோதிடப் புரட்டு
விலை அணா 2.

பர்னூர்ட்ஷா உபந்யாசம்
விலை அணா 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணா.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

சிதம்பர ரகசியம் ...	0—8—0
சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை	0—6—0
மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ...	2—0—0
ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை ...	0—6—0
சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
சாமிகளின் அடிமைகள் ...	0—12—0
சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
பகுத்தறிவு கீதம் ...	0— —0
காந்தி கிட்டு ...	0—

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகப் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன் அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறை ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி [illegible] முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—[illegible]—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம்	ரூ. 4—[illegible]—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

வெளிவந்து விட்டது!

நமது புதிய பிரசுரங்கள்!!

சோஷியலிசம்.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ். பர்னட்ஷா எழுதிய. "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணா 3.

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. தனிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
50 காப்பிகள் 1—4—0. 100 காப்பிகள் 2—0—0. 500 காப்பிகள் 8—0—0. தபால் செலவு வேறு.

போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

Socialist Leagues

சோஷலிஸ்ட் லீக்ஸ்.

(தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.)

இந்தியாவிலுள்ள சமூக, சீர்திருத்த, அரசியல் மததத்தவஸ்தாபனங்கள் யாவும் தொழிலாளர்கிருஷிகர்முன்னுக்கு வரும்படியானலட்சியங்களைக்கொண்டதாக ஒன்றுமில்லை, பகுத்தறிவு ஸ்தாபனங்களும், அறிவுமயமாக நின்று உழைத்து வருகின்றனவே ஒழிய, சரீர சம்பந்தமானமூலப்பொருள்களை அடையவேண்டிய மார்க்கங்களைப்பற்றி எடுத்துரைப்பதில்லை. ஐரோப்பா, அமெரிக்க நாடுகளிலும், பகுத்தறிவுச் சங்கங்கள் அரசியல் துறையில் இறங்கி உழைப்பதைக்காணோம். சமூக நடவடிக்கையிலும் ஈடுபடுவதில்லை. விஞ்ஞானம் சமூகவாழ்வில் பிரவேசிப்பதுமில்லை. இனி மேற்கண்டஸ்தாபனங்கள் சமூக முக்கிய விஷயங்களில், தலையிடுமோ என்பதும் சந்தேகம். இக்காரணநிமித்தத்தால் பிரத்யேகமாக அரசியல் துறையில் நுழைந்தது,தற்கால சமூகவாழ்க்கையைத்திருத்தமாற்றி புதிய சமூகவாழ்க்கையைஉண்டுபண்ணவேண்டி.,உழைப்பவர்சள்கழகம்என்றும்சமதர்மகழகமென்றும் (சோஷியலிஸ்ட்) பொதுவுடமை கழகமென்றும்(கம்யூனிஸ்ட்)மேல் நாடுகளில் உழைப்பவர்கள் புத்துயிர்பெற உழைத்து வருகின்றன.

நமதுநாட்டில் உழைப்பவர்களுக்கென (டிரேட் யூனியன்) தொழில்யூனியன் என்றும் அந்த தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்களுக்காக ஏற்பட்டுள்ளன. ஆனால் இந்த தொழிற்சாலை யூனியன்கள் அந்தந்த சமயத்திற்கு தொழிலாளருக்கு வேண்டிய சிற்சில அவசியங்களைக் குறித்துவேலை செய்து வருகின்றன. பொதுவாக அரசியலில், தொழிலாளரும் கிருஷிகர்களும் அடைய வேண்டிய ஆதிக்கத்தைப்பற்றி, தொழிலாளர்சங்கங்கள் தலையிடுகிறதில்லை- இக்குறையால் தொழிலாளர் சங்கங்கள் அரசியலுக்கு அதீதமாகவே கருதப்பட்டு வருகின்றன- நமது நாட்டில் கோடானகோடி கிருஷிகளுடைய நன்மையைப் பற்றி பொதுவாக அரசியலில் உழைத்து வரும் சங்கம் யாதேனுமில்லை- கடந்த பத்துவருட காலமாக தென்னாட்டில் சுயமரியாதை இயக்கம் ஒன்று தோன்றி பொது மக்களின் சமூகவாழ்க்கையை உயர்த்த உழைத்து வருகிறது. சமூக சீர்திருத்தங்களாகிய பெண்கள் உரிமை, மூட பழக்கவழக்கங்களைப்போக்குதல், புரோகிதர்பகிஷ்காரம், ஜாதிஆதிக்கத்தை ஒழித்தல்,கலப்பு மணங்களை ஆதரித்தல் சமபந்தி போஜன வழக்கத்தை உண்டாக்குதல் முதலிய உயர்தர சமூக வாழ்க்கைக்கு வேண்டிய திருத்தங்களில் ஈடுபட்டுவருகின்ற சுயமரிதை இயக்கம் இவ்வித சமூகசீர்திருத்தங்களில்,உழைத்து வருவது போற்றத்தக்கதாகும்- ஆனால், இவ்வித சீர்திருத்தங்கள் முக்கியமாக முதலாளிகளுக்கும் பூஷ்வாக்களுக்கும்சிறு முதலாளிகளுக்கும்எவ்வளவு அவசியமாயினும்தொழிலாளர் கிருஷிகர்களுடைய சரீரசம்பந்தமான நன்மைகளுக்கு சீர்திருத்தங்கள் தற்போது வேண்டியதில்லை- இதுவே சோஷியலிஸ்ட் பெரியோர்களின் பூரண அபிப்பிராயமாகும். ரஷ்ய புரட்சிக்கு அடிப்படையாக நின்றவை, சரீரசம்பந்தமான பொது உணவு, பொதுநிலம் பொது சமாதானம் இவைகளே- ஜாதிஒழித்தலுமல்ல! மதத்தை அழித்தலுமல்ல-சமபந்தி போஜனமல்ல! கலப்பு மணமுமல்ல! இவைகள் சமூசீர்திருத்தங்களுக்கு எவ்வளவு அவசியமாயினும் புரட்சிக்கு வேண்டியவைகளல்லவென்று சோஷலிஸ்டுகளால் மதிக்கப்படுகின்றன முதலாளித்திட்டத்தை மாற்றி- தொழிலாளர் கிருஷிகர் ஆதிக்கத்தைப்பெருக்கச் செய்யும்வரை தொழிலாளர்களையும் கிருஷிகளையும் ஜாதிமத தர்க்கங்களைக்கொண்டு அவர்களைக்கலைக்கக்கூடாதென்பது சோஷலிஸ்ட் தலைவரான லெனின் அவர்களுடைய முக்கிய கருத்தாகும்-சமதர்மத்தை நமது நாட்டில் போதிக்கவந்த தோழர் சக்லத்வாலாவின் அபிப்பிராயமுமிதுவே நமதபிப்பிராயமுமிதுவே-ஆதலின் இந்த ஆட்சேபணைகளுக்கிணங்க நமது தலைவர் ராமசாமியாரும் ஐரோப்பிய யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பி வந்தபிறகு ஈரோட்டுத்திட்டத்தை வகுத்தார்- ஈரோட்டுத்திட்டத்தை இதுவரையிலும் அமுலுக்கு கொண்டு வராத விஷயம் மிகவும் வருந்தத்தக்கத-ஆனாலும் காலப்பேக்கில் அதில் சிற்சில குறைபாடுகள் காணப்படுகின்றன- முக்கியமான குறை என்னவெனில்,தொழிலாளர் கிருஷிகர் ஆதிக்கம் வலுத்த பிறகு வேண்டிய பூரண சுதந்தரம் கடன்மறுப்பு முதலிய லக்ஷியங்கள்,தற்போது விளம்பரத்திற்கு அவசியமில்லையென்றே தோன்றுகிறது- இந்த லக்ஷியங்கள் முக்கியமாக முதலாளிகள் வெரும் சொல்லால் கோரும் லக்ஷியங்களாகும் பூரணசுதந்தரம் தொழிலாளருக்கு வந்தாலொழிய முதலாளிகளுக்காவது அல்லது சிறுமுதலாளிகளுக்காவதுவருவதில் பயனில்லை- தற்போது நமக்கு வேண்டியது தொழிலாளர்கிருஷிகர் ஆதிக்கம்- அரசியல் மூலமாக தொழிலாளர் கிருஷிகர்களுக்குவேண்டியஉணவு,நிலம், உலகசமாதானம்- இம்மூன்றும் தொழிலாளர், கிருஷிகர் தங்களுடைய வன்மையால் பெற்றால் போதும். அதனைப்பெறுவதற்குசோஷலிஸ்ட் பெரியோர் வழிகாட்டவேண்டியது அவசியம். இதுதான்நமதுபணி- சுயமரியாதையோர் தாங்கள் எடுத்த சமூக சீர்திருத்தங்களை இன்னும் பலமாக செய்துவரட்டும்- சமதர்மிகள் இவர்கள் எடுத்துக்கொண்ட சமூக பொருளாதார திட்டங்களை ஊக்கத்துடன் பரவச்செய்து வரட்டும். சுயமரியாதைக்காரர்களும், சமதர்மிகளும் ஒன்று சேர்ந்து,ஈரோட்டுத் திட்டத்தை வழங்கிவரச்செய்யட்டும் இவைகளின் மத்தியில் தொழிலாளர் கிருஷிகளுக்கென அரசியல் துறையில் ஆதிக்கத்தைப் பெறச்செய்ய வழிகாட்டும் ஓர் திட்டம் வேண்டியதென்றே தோன்றுகிறது. அகில தேச சோஷலிஸ்ட் திட்டமென்று நமது இந்தியாவிலும் ஏற்பட வேண்டும். அந்ததிட்டத்தைச், சாதிக்க தொழிலாளர் கிருஷிகர் இவர்களுக்கு வழிகாட்டவல்ல என்று வழங்கும் தொழிலாளர்கிருஷிகர் முதற்படை கட்சிஒன்று இன்று இந்தியா முழுமையும் தோன்றவேண்டும் இவைகளை சோஷலிஸ்ட்லீக்ஸ் என்று அகிலதேச சோஷலிஸ்ட் லீக்குகளைப்போல் பெயரிட்டு அழைத்தல் வேண்டும்- பொதுவுடமைப்பார்ட்டிஎன்று ஆங்கிலேயம் படித்தோர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. அதுவும் தொழிலாளர்கிருஷிகர்கட்கு உழைத்து வாட்டும்:இதனால் தொழிலாளர்கிருஷிகர்கட்கு வேண்டிய மேற் கூறிய மூன்று அத்யாவசியங்களைப் பெறச்செய்யஒவ்வோர்தனித்த சோஷலிஸ்லீக் என்று மகுடமிட்ட சபைகள் இந்தியா முழுமையும் தோன்ற வேண்டும்-பற்பல விஷயங்களில் தலையிட்டுக்கொள்வதனால் கலகம்ஏற்படும்- இதனைத்தடுக்கும் மார்க்கம் ஒன்றே அதாவது தொழிலாளர் கிருஷிகர் தாங்களே தங்களுக்கு வேண்டிய அத்யாவசியங்களை தாங்களே தேடிக்கொள்ள ஓர் முதற்படையாளர் வேண்டுவதவசியம். இந்த அவசியத்தைப் பூர்த்தி செய்ய இரண்டொரு மாதத்தில் திருச்சினாப்பள்ளியில் இந்த முதற்பணியை ஏற்றுக்கொண்டு சோஷலிஸ்ட் லீக்குகளைஸ்தாபிக்க பிரியமுள்ள தோழர்கள், குறிப்பிடும் தேதியில்கூடி ஆலோசிக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றது-

லீக்குகளின் முக்கிய நோக்கங்கள்

(1) உழைப்பவர் களுடைய, அதாவது, தொழிலாளர் கிருஷிகளுடைய உரிமைகளை உணரச் செய்வித்தல்.

(2) உழைப்பவர்வளைக் கொண்டு, அவர்களின் ஆதிக்கத்தை அரசியலில் பெருக்கச்செய்வது.

(3) உழைப்பவர்களுடைய சங்கங்களில் And Peasant union) கலந்து வேலைசெய்தல்-

(4) அகில உலகத் தொழிலாளர்கள், கிருஷிகள் கூட்டுறவில் கலந்து, உலகச் சண்டை, போர் முதலியவைகளை நிறுத்த முயலுதல்.

(5) தொழிலாளர், கிருஷிகள் அவர்கள் அனுதாபிகளைக் கொண்டு சட்டசபை பிரதிநிதிகளாக அங்கத்தினர்களை நியமித்து சட்டசபையில் உள்ளும் புறம்புமாக நின்று, நிலம், நீர், வீடு உணவு, தொழிற்சாலைகள் முதலிய பொருள்களை பொது உடமையாக்க முயன்று வருதல்.

(6) அந்தந்த கிராமாந்தரங்களிலும், ஜில்லாக்களிலும் சோஷலிஸ்ட் லீக்களை தொழிலாளர், கிருஷிகளைக் கொண்டு ஸ்தாபித்தல்.

(7) இத்திட்டத்தை ஆங்கில பாஷையிலும், தமிழ், ஹிந்தி பாஷைகளிலும் துண்டுப் பிரசுரங்களில் அச்சிட்டு தொழிலாளர், கிருஷிகர்களுக்கு விநியோகித்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க

ரோஜா முத்தையா

சென்னை அரசாங்கத்தார் 47-1934 நெ. உத்திரவு.

சென்னை கல்வி இலாக்கா விதிகளின் 92-வது பிரிவின் படி இந்த மகாணத்திலுள்ள எல்லா உயர்தரப் பாடசாலைகளிலும் வாசித்து வரும் பிற்போக்கான வகுப்பைச் சேர்ந்த ஏழை ஆண்பிள்ளைகளிடமிருந்து பாதிச் சம்பளம் மட்டும் வாங்கப் பட்டு வருகிறது. பிற்போக்காளர் என்னும் சொல் கல்வியில் மற்றவர்களைப் போல்முன்னேற்ற மடையாமல் பின்னால்இருக்கும் வகுப்பினர்களைக் குறிக்கும் அதாவது பள்ளர், பறையர்முத்திரியர், படையாச்சி, நாயக்கர், இடையர், கள்ளர், வண்ணார், அம்பட்டர், கம்மாளர், கைக்கோளர், லிங்காயதர் (முதலிய வர்கள் ஆவர்) இந்து, முகமதியர்கிறிஸ்துவர் முதலியஎந்த வகுப்பைச்சேர்ந்த பெண்களாயிருந்தாலும் எல்லா உயர்தரப் பாடசாலைகளிலும் ஏழை யென்பதற்குப் பாதிய ஆதாரம் காட்டியவர்களுக்கு 3-வது பாரம் முடிய இலவசக் கல்வி யளிக்கப் பட்டு வருகிறது, 4-வது பாரம் முதல் 6-வது பாரம் முடிய பாதிச் சம்பளம் மட்டும் வாங்கப்பட்டு வருகிறது. இதுவரை நடை முறையில் இருந்து வந்த உத்திரவுப்படி மேலே கண்ட சம்பள விகிதத்தில் எத்தனை பிள்ளைகள் வேண்டுமானாலும் ஓர் உயர்தரப் பாடசாலையில் சேர்ந்து வாசித்து வரலாம்.

(2) ஆனால் சமீபத்தில் 6-1-34 சென்னை அரசாங்கத்தார் இம் மாகாணத்திலுள்ள எல்லா உயர்தரப் பாடசாலைகளின் மானேஜர்களுக்கும விடுதிக்கும் ஜி. ஓ நெ. 47 உத்திரவில், உயர்தரப் பாடசாலையில் வாசிக்கும் பிற்போக்கான வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும், எல்லா சமூகங்களிலுமுள்ள மாணவிகளுக்கும் சென்னை கல்வி இலாகா விதிகளின் 92-வது பிரிவின் படி தள்ளுபடி செய்யப்படும் சம்பளத் தொகையானது, அந்த பள்ளிக் கூடத்தின் முந்திய வருஷத்திய மொத்தச் சம்பள வசூலில் 100-க்கு 7½, விகிதத்திற்கு மேல் போகக் கூடாது என்று கண்டிபபாய்த் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த உத்திரவு இவ் வருஷம் ஜூன் மாதம் முதற்கொண்டே எல்லா பள்ளிக்கூடங்களிலும் அமுலுக்கு வரும். இந்த உத்திரவுப்படி பார்த்தால், ஒரு உயர்தரப் பாடசாலையில் ஒரு குறிப்பிட்ட வருஷத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் முழுச சம்பளம் கொடுத்து வாசிக்கிற மாணவர்கள 100-பேர் இருந்தால், மறு வருஷத்தில் அந்தந்த வகுப்புகளில் பிற்போக்கான வகுப்பை சேர்ந்த மாணவர்கள் 15பேர் வாசிக்கலாம். இந்தப் பதினைந்து பேர்களும் ஆண் பிள்ளைகளாயிருந்தால் தகன் முடியும் பெண் பிள்ளைகளும் வாசித்து வந்தால் இப் பதினைந்துக்கும் குறையும்.

(3) கீழே குறிப்பிட்டிருக்கும் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் உள்ள ஒரு உயர்தரப் பாடசாலையின் 33 34 வருஷத்திய புள்ளி விவரங்கள் மேலே கண்ட விஷயங்களை நன்கு விளக்கிக் காட்டும்:—

33 34 மொத்த மாணவர் மாணவிகளின் தொகை—615

பிற்போக்கான வகுப்புகளைச் சேர்ந்தஆண்பிள்ளைகள் மட்டும்—288

எல்லா சமூகங்களையும் சேர்ந்த பெண்பிள்ளைகள்—32

எம். ஈ. ஆர். 92-வது விதிப்படிசம்பளம்தள்ளுபடி செய்யப்பட்டவர்கள் ——— 320

(4) மொத்தம் 615 பிள்ளைகளில் 288 ஆண் பிள்ளைகள் பாதிச் சம்பளம் கொடுத்தும், 32 பெண் பிள்ளைகள் சம்பளமே கொடுக்காமல் இலவசமாகவும் கல்வி கற்று வருகிறார்கள். ஆனால் அரசாங்கத்தாரின் 47நெ உத்திரவு படி அடுத்த வருஷத்தில் (1934,35) எண்பதுபிள்ளைகளுக்குத்தான் பாதிச் சம்பளம் தள்ளுபடி செய்ய வேண்டி வரும். இந்த எண்பதும் ஆண் பிள்ளைகளாக விருந்தால் தான்; பெண் பிள்ளைகளும் வாசித்தால் 50 அல்லது 60 பிள்ளைகளுக்குத்தான் பாதிச் சம்பளம் தள்ளுபடி செய்து கொடுக்க முடியும். ஆகவே இதுவரை சர்க்கார் உதவியால் பாதிச் சம்பளம் கொடுத்து வாசித்து வந்த 288 ஆண் பிள்ளைகளும் சம்பளமே இல்லாமல் இலவசமாய் வாசித்து வந்த 32 பெண் பிள்ளைகளும் ஆக 320 பிள்ளைகளில் சுமார் 60 பேர் போக மீதியுள்ள சுமார் 260 பிள்ளைகளும் முழுச் சம்பளம் கொடுத்து வாசிக்க வேண்டும் அல்லது பள்ளிக் கூடத்தை விட்டு விலகிக் கொள்ள வேண்டும்.

(5) மேலே கண்ட 47 நெ. உத்திரவினால் விளையும் தீமைகள்:— இதுவரை சம்பளத் தள்ளும்படி செய்யப்பட்டு வந்த பிள்ளைகளின் பெற்றோர்கள் எல்லோரும் ஏழைக் குடியானவர்கள், விவசாயக் கூலிகள் தினக் கூலிகள் ஆவார்கள். இந்தஏழைப்பெற்றோர் ஒருக்காலும் தங்கள் பெண் பிள்ளைகளுக்குமுழுச் சம்பளம் கொடுத்து படிக்க வைக்க மாட்டார்கள். ஒருவேளை இவர்களில் சிறசிலர் தங்கள் ஆண்பிள்ளைகளுக்குமுழுச்சம்பளம்கொடுத்து படிக்க வைக்கிறதாகவைத்துக் கொண்டாலும், 3-வது பாராவில் கண்ட பள்ளிக்கூடத்தின் மொத்த மாணவர்களின் தொகை வரப்போகும் வருஷத்தில் 425க்கு மேல் போகாது. இம் மாகாணத்தின் கிராமப் பகுதிகளில் உள்ள எல்லா உயர்தரப் பாடசாலைகளிலும் இதே நிலைமை தான் இருந்துவருகின்றது. ஆகவே இந்த உத்திரவானது இம் மாகாணத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பையும் பிற்போன வகுப்பையும் சேர்ந்த ஆண்பிள்ளைகள் எல்லா சமூகங்களையும் சேர்ந்த பெண் பிள்ளைகள் ஆகியவர்களிடையே நடுத்தரக்கல்வி பரவுவதை முற்றிலும் தடுக்கக்கூடியதாயும், பிற்போக்கான வகுப்பைச்சேர்ந்தவர்களை என்றும் பிற்போக்காகவே இருக்கும்படி செய்யக் கூடியதாயும் இருக்கிற தென்பதை அரசாங்கத்தாரும், பொது ஜனங்களும் நன்கு உணரவேண்டும்.

(6) இனி, அரசாங்கத்தார் இது வரை சம்பளத்தள்ளுபடி செய்ததால் பிற்போக்கான வகுப்பைச்சேர்ந்தவர்கள் எவ்வளவு தூரம் நம்மையடைந்து வந்திருக்கிறார்கள் என்பதைக் கவனிப்போம். பள்ளர், பறையர் முதலிய தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆண் பிள்ளைகளும், மற்ற பிற்போக்கான வகுப்பைச் சேர்ந்த ஆண்பிள்ளைகளும் சுமார் 7-அல்லது 8-வருஷ காலங்களாகத் தான் உயர் தரப்பாடசாலைகளில் நுழைந்திருக்கிறார்கள் இவர்களில் பெரும்பாலோர் இந்தப் பாதிச் சம்பளமும் கொடுக்க முடியாத பணக் கஷ்டத்தால் 3-வது பாரத்தோடு தங்கள் படிப்பை நிறுத்திக் கொள்ளுகின்றார்கள். மிகச் சிலரே 4-வது பாரததை எட்டிப் பார்த்திருக்கின்றார்கள். ஆகவே அவர்கள் சிறிதளவு தான் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். இந்த நிலையில் அரசாங்கத்தார் 100-க்கு ஏழரை விகிதம் தான் உதவி செய்ய முடியும் என்ற கடுமையான உத்திரவை வற்புறுத்தினால், இவர்கள் நடுத்தரக்கல்வியின் வாசனையை அறிவது எங்கனம் கூடும்? ஒருவேளை இவர்களுக்கு இலவசமாமாகக் கிடைக்கிடைக்கும் ஆரம்பக்கல்வி போதாதா வென்ற கேள்வி கேட்கப்படலாம். உயர்தரக்கல்வியோ, அல்லது நடுத்தரக்கல்வியோ இல்லாமல், கிராமாந்திரங்களில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளின் 3-வது 4-வது வகுப்புப்படிப்பு இத் துணைபயன் தரக்கூடியது, தந்திருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இனிப் பெண் பிள்ளைகளின் கதியைச் சற்று நோக்குவாமாயின் நெஞ்சு திடுக்கிடுகின்றது. பெண்பிள்ளைகளுக்கு 3-வது பாரம் வரையில் இலவசக்கல்வியளிக்கப்படும் என்ற சர்க்கார் உத்திரவானது சமீபத்தில் 1929 ம் வருஷத்தின் இறுதியில் தான் பிறப்பிக்கப் பட்டது. சென்ற 4-வருஷங்களாகத்தான் இவ்வுத்திரவு அமுலில் இருந்து வருகிறது. இதன் மூலம் ஏதோ சிற்சில உயர்தரப் பாடசாலைகளில் மட்டும் மிகச்சில எண்ணிக்கையுள்ள பெண்பிள்ளைகள் 4-வது, 5-வது வகுப்புகளில் வாசித்து வருகின்றார்கள். 1929-ம் வருஷக்கடைசியில் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்திரவானது பொது ஜனங்களில் பலருக்கு இன்றைக்கும் தெரியாது மின்னல் மறைவது போல் இவ்வுத்திரவானது தோன்றி மறைந்து விடுவதாகும். இனி உயர்தரப் பாடசாலைகளிலும், மாணவர்களின் எண்ணிக்கையை உத்தேசித்து அதிகம் சேர்க்காமல் ஆண்பிள்ளைகளைப்பெரிதும் சேர்த்துக் கொள்ளுவார்கள். ஆகவே இனி பெண்பிள்ளைகள் உயர்தரப் பாடசாலைகளை எட்டிப் பார்ப்பது எங்கனம் முடியும்? ஒருக்காலும் முடியாது. ஆரம்பப் பாடசாலையில் முதல் 3-வகுப்புகளில் கற்ற கல்வியைக் கொண்டு பெண்கள் தங்கள் வாழ்க்கையை எந்த வழியிலும் சீர்திருத்திக் கொள்ள முடியாது.

நிற்க, இந்த 100-க்கு ஏழரை வீதம் என்னும் கடுமையான உத்திரவைப் பிறப்பித்ததற்குச் சர்க்கார் கூறும் காரணங்களைச் சற்றுக் கவனிப்போம். கல்வி இலாகாவில் அதிக பணம் செலவாகிறதென்றும், பொருளாதார நெருக்கடியை முன்னிட்டு இச் சிக்கனம் செய்யப்பட்டிருக்கிற தென்றும் சர்க்கார் தங்கள் உத்திரவில் கண்டிக்கிறார்கள். சர்க்கார் தங்கள் 47 நெ. உத்திரவுப்படியே வேறு 2-வகைகளில் போதுமான சிக்கனம் செய்திருக்கிறார்கள் அதாவது:—

(1) பிற்போக்கான வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஒரே வகுப்பில் இரண்டாம் வருஷம் படித்தாலும் பாதிச்சம்பளம் கொடுத்தால் போதும் என்றும் மூன்றாம் வஷம் படித்தால் தான் முழுச்சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும் இதுவரை அமுலில் இருந்து வந்த விதியை முதல் வருஷத்திற்குத்தான் பாதிச் சம்பளம் என்றும், இரண்டாம் வருஷம் அதே வகுப்பில் வாசித்தால் முழுச்சம்பளம் கட்ட வேண்டும் என்றும் மாற்றி விட்டார்கள். (2) எம். ஈ. ஆர். 92-வது விதிப்படி, பிற்போக்கான வகுப்பைச் சேர்ந்த ஒரு பையன் முழுச்சம்பளம் கொடுத்து வாசிக்க முடியாத அவ்வளவு ஏழையென்பதற்கு ஒரு அத்தாட்சிவாங்க வேண்டியிருக்கிறது. இந்த அத்தாட்சிப் பத்திரம் தாழ்த்தப் பட்டவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு தாலூகா போர்டு, அல்லது ஜில்லா போர்டு அங்கத்தினரிடமிருந்தோ அல்லது பஞ்சாயத்து போர்டு தலைவர், தாலூகா போர்டு தலைவர், தாசில்தார், சப் மாஜிஸ்திரேட் ஆகியவர்களில் யாராவது ஒருவரிட மிருந்தோ வாங்கினால் போதும் என்றிருந்த விதியை தாசில்தார் அல்லது டிப்டி கலக்டரி

தொடர்ச்சி 18ம் பக்கம்பார்க்க

இன்றைய ரஷ்யாவின் நிலை.

(ஏ. வி. சீனிவாசன் மொழிபெயர்ப்பு)

அப்பொழுது 9மணி இருக்கும். நடுவில் உஷ்ணத்தைத் தரத்தக்க ஆவி உண்டாக்கும் ஓர் தகுந்த ஏற்பாடு செய்திருந்ததனால் நான் அன்று நன்றாய் தூங்கினேன். ஆம்பர்க்கில் இவ்வாறு உஷ்ணமுண்டாக்குவதற்கு யாதொன்றும் செய்யாதிருந்த ஓர் ஓட்டலில் தங்கி இருந்ததைப் பற்றி நான் ஞாபகப் படுத்திக் கொண்டேன். நான் மெல்லிய மெத்தையின் மீது படுத்திருந்த போதிலும் கூட தலையில் எனது மூளைகலங்கிவிட்டதாகவும் நான் மூர்ச்சையாய் விட்டதாகவும் புலப்பட்டது. மற்றும் அந்த அறையில் குளிர் நிறைந்து இருப்பதாகவும், நான் ஓர் உஷ்ணத்தை உண்டாக்கும் கருவிபோலவும் தோன்றியது. இங்கிலாந்திலும் கூட அநேக ஓட்டலில் ஒருவன் இத்தகைய கஷ்டத்தை அனுபவிக்க நேரிடுகின்றது. ஏனெனில் தற்போதுள்ள ஏற்பாட்டை மாற்ற வேண்டுமென்று நினைக்கின்றனர். அங்குள்ள கட்டடங்களின் நடுவில் உஷ்ணத்தை தரத்தக்க ஏற்பாடு ஒன்றும் பொருந்தாது. ஆனால் இந்த ஓட்டலில் உஷ்ணம் உண்டாக்க வேண்டிய வசதிகள் நன்றாய் இருந்தன. குளியல் அறையில் குளிர்ந்த நீரும், வெந்நீரும் குழாயின் வழியாக விழுந்தபடியாகவே இருந்தது. காலை போஜனம் எனக்கு காரமாக இருக்கவில்லை. டீயும் ஒரு துண்டு ரொட்டியும் தான் நான் சாப்பிட்டேன் என்னுடைய வழிகாட்டி சிரித்த முகத்துடன் சாப்பிடும் அறைக்கு வந்து ''வந்தனம் ஐயா, நன்றாய் தூங்கினீரா? என்றும் நீங்கள் வெளியே செல்ல தயாராய் இல்லையா? என்றும் நீர் ஏன் இவ்வாறு சோம்பேரியாய் இருக்கின்றீர் என்றும் கேட்டாள். "நான் டீயை குடித்துக் கொண்டே, நான் தயாராய் தான் இருக்கிறேன் 'உமக்காகத் தான் காத்துக் கொண்டு இருக்கிறேன்" என்றும் கூறினேன், 'வாருங்கள் சீக்கிரம்; இன்றைய தினம் நாம் நேரத்தை வீணே கழிக்கலாகாது" என்று சொன்னாள்., நான் என்னுடைய சட்டையை போட்டுக் கொண்டு வருகிறேன், ஒரு நிமிடம் வரை பொருங்கள் என்று நான் அவளை தயை கூர்ந்து கேட்டுக் கொண்டேன். மேலே தூக்கும் கருவி என்னை மேலே கொண்டு வந்து விட்டது. என்னுடைய அறைக்குச் செல்லும் தருவாயில் நான் சில குழந்தைகளைசந்தித்தேன். அவர்கள் மிக அழகாகவும், உற்சாகமுடையவர்களாகவும் இருந்தபடியால் நான் அவர்களிடத்தில் ஓர் க்ஷணமேனும் நில்லாமல் போக முடியவில்லை. அவர்களில் சுமார் ஏழுவயதான ஓர் பெண் "உமக்கு ஆங்கிலம் பேசத் தெரியுமா" என்று பிழையில்லாமல்படி ஆங்கிலத்தில் கேட்டாள். அவ்வழகிய குழந்தைகளுடன் பேச சமயம் வாய்த்ததைப் பற்றி நான் சந்தோஷமடைந்தேன் "நீ ரஷியனா? என்றும், "நீ எவ்வாறு சுத்தமாக ஆங்கிலத்தில் பேசுகின்றாய்?" என்றும் கேட்டேன். அந்தப் பெண் "ரஷியன் அல்ல ஐயா, நான் ஓர் அமெரிக்கப் பெண். என்னுடைய தகப்பனார் இங்கே ஓர் இஞ்சினீயராக இருக்கிறார்". என்று பதிலளித்தாள். "நீர் எத்தனை நாளாக இங்கே இருக்கின்றீர்களா?" என்று நான் கேட்டதற்கு அப்பெண் "சுமார் பத்து மாதமாக இங்கேயே இருக்கிறோம் ஆனால் நாங்கள் இனி அநேக நாள் இங்கே இருக்க மாட்டோம்" என்பது உமக்குத் தெரியும். ரஷியர்கள் மிகவும் கெட்டவர்கள் என்று கூறினாள் இந்தப் பெண் எதற்காக ரஷ்யர்கள் மீது இத்தகைய கோபம் என்பதை அறிந்து கொள்ள நான் ஆவலானேன். என்னுடைய தந்தை இங்கே இரண்டு வருடம் வேலை செய்வதாக ஒப்பந்தம் செய்துள்ளார் ஆனால் அவர்கள் எங்களை மிகவும் இம்சை செய்கிறார்கள். அவர்கள் மிகவும் கர்வமுள்ளவர்கள் என்பது உமக்குத் தெரியும். எங்களிடத்தில் அவர்களுக்கு வேலையிருக்கும் வரையில் எங்களை அவர்கள் துதி செய்வார்கள். ஆனால் எங்களிடத்திலிருந்து வேலையைக் கற்றுக் கொண்டதானதும் எங்களை இவ்வூரை விட்டு துரத்துவார்கள். அவர்கள் வேலையைக் குறித்து ஒப்பந்தம் செய்து கொண்டதால் அவ்வாறு அவர்கள் எங்களை ஏமாற்ற முடியாது. ஆகையால் தான் அவர்கள் எங்களை தூஷிக்கின்றார்கள் என்று கூறினாள். மற்ற இரண்டு பெண்களுக்கும் நாங்கள் பேசியது இன்னதென்று தெரியாது என்பது வெளிப்படையாகிற்று. நான் அவர்களை உங்களுக்கு ஆங்கிலம் பேசத் தெரியுமா?' என்று கேட்டேன். அவர்கள் என்னைப் பார்த்து சிரித்து நான் அறிந்து கொள்ள முடியாத சில வார்த்தைகளை கூறினார்கள். அந்த அமெரிக்க பெண் "அவர்கள் ரஷ்ய தேசத்துப் பெண்கள் அவர்களுக்கு ஆங்கிலம் பேசத் தெரியாது ஆனால் நான் ரஷ்யபாஷை, ஜெர்மனி பாஷை, ரென்சு பாஷை கூட பேசுவேன்" என்று கூறினாள் அவளை பரிசோதிக்கவே "நீ எவ்வாறு இத்தனை பாஷைகளையும் கற்றனை?" என்று ஜர்மன் பாஷையில் கேட்டேன். அவள் "நான் இரண்டு வருடம் ஜெர்மனியிலும், ஓர் வருடம் பிரான்சிலும் இருந்தேன். என்னுடைய தந்தை அங்கேயெல்லாம் வேலை செய்துள்ளார்" என்று ஓர் இயந்திரத்தைப் போல விரைவாக பதிலளிக்க ஆரம்பித்தாள். எனக்கும் புத்தி வந்தது. நான் அனாவசியமாக என்னுடைய வழிகாட்டியை நிறுத்திக் கொண்டு இருந்தேன். அவர்களெல்லாம் எனக்கு வந்தனம் செலுத்தினார்கள். அமெரிக்காப்பெண் "நல்லது, நீங்கள் தயவு செய்து இன்றைய சாயந்திரம் நடக்கும் எங்கள் பாட்டுக் கச்சேரிக்கு வாருங்கள்" என்று கேட்டுக் கொண்டாள். நான் அதற்குள் திரும்பி வருவேனாகில், அப்படியே அங்கே செல்வதாக வாக்களித்தேன். ஒரே நாளில் அநேக இடங்களுக்குப் போகவேண்டியிருப்பதால், ஓர் வாடகை காரை வைத்துக் கொண்டு நகர முழுவதும் சுற்றி வருவதற்கு சௌகரியமாய் இருக்குமென்று வழிகாட்டி எனக்கு எடுத்து கூறினாள். நானும் அதை ஒத்துக் கொண்டேன். ஆகையால் காருக்கு ஏற்பாடு செய்ய வேண்டிய நாங்கள் உள்நாட்டுச்சுற்றுப்பிரயாணி ஆபீசுக்குப் போக வேண்டியிருந்தது. அந்த ஆபீஸ்வெகு தூரத்தில் இல்லாததாலும் தேசீதோஷ்ணஸ்திதியும் கடூரமாக இல்லாமையாலும் நாங்கள் அங்கே நடந்து சென்றோம். எல்லாசாமான்களும் அமையப் பெற்றதுமான ஓர் உயர்ந்தகடையாவது நான்பார்க்கவில்லை. வாடகைகாரர்களை பார்ப்பது அற்புதமாக இருந்தது. ஆனால் ரஷியர்களுடைய சொந்த கார்கள் செய்யும் இயந்திரசாலைகளில்கார்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்தால்கூடிய சீக்கிரத்தில் அதிகமாக இத்தேசத்தில் குவிந்துவிடுமென்று அவர்கள் நம்புகின்றனர். தற்போது உலக வியாபாரத் துறையில் ரஷியா தன்மதிப்பை இழந்து விட்டதாகையால் இத்தேசம் தன்னுடைய உணவுப் பொருள்களையும் கொடுத்து அதற்குப் பதிலாக எல்லா சாமான்களையும் தங்கமாக வாங்கவேண்டியிருக்கின்றது. அங்கே முக்கியமாகச் சாமான்களை ஏற்றிச் செல்லவே சில வாடகை வண்டிகள் இருந்தன. இவைகள் இதுவரையில் தனிப்பட்ட சொத்தேயாகும். ஒருவரும் வியாபாரத்தினால் லாபமடையாவிடில் இப்போதுகூட ரஷ்யர்களுக்குத் தனியே வியாபாரஞ் செய்ய உரிமையுண்டு. சிலதனி நிபந்தனையைத் தவிர்த்து ஓர் தனிப்பட்ட வியாபாரி ஒருவருக்காவது வேலை கொடுக்கக்கூடாதென்று சட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. குடியானவர்களைக்கூட அவர்கள் நிரேக அசௌகரியமாய் இருக்கும் சமயத்திலும் அல்லது இத்தகைய சிலசந்தர்ப்பங்களில் தவிர்த்தும் கூலிக்கு வேலைசெய்ய அனுமதிப்பது கிடையாது. புரட்சிக்காரர்களின் தனித்த வீரச் செயல்களைப்பற்றிய சட்டங்களை மாற்றிவிட்டனர். ஆனால் அக் கருத்துகளை மாற்றவில்லை. தற்போது ரஷ்யாவில் எல்லா வகையான தனித்த வியாபாரமும் சட்ட மூலமாக நடத்திக்கொள்ளலாம்.

அரசாங்கத்தாரால் விதிக்கப்பட்ட அதிக வரிக்காகவேண்டியும், மிதமிஞ்சிய வரிகளுக்காகவும் அரசாங்கத்தில் போதிய அளவு சாமான்கள் இல்லாமையாலும் வியாபாரத்தைப் பெரிய அளவில் நடத்தக் கஷ்டமாய் இருக்கின்றது. தனித்துள்ள வியாபாரிகள் ஒரு தொழிலாளியையும் கூலிக்கு வேலைசெய்ய அனுப்பாவிடில் குயவன் சாமான்களைச் செய்து அவைகளைச் சந்தையில் விற்கக்கூடும். அவ்வாறே நெசவாளிகளும், தச்சனும், தட்டானும் அல்லது இத்தகைய இதர தனித்த வியாபாரிகளும் தத்தம் வியாபாரத்தை நடத்திச் செல்லவும் சயான்களைப் பகிரங்கமாக விற்கவும் கூடும் அதாவது பிறர் கஷ்டத்தினால் மற்றொருவர் பிழைக்கக்கூடாதென்பதேயாம் ஆனால் தனிப்பட்ட வியாபாரிகளுக்கெல்லாம் ஓட்டுரிமை கிடையாது. அவர்கள் வரி செலுத்துவதிலும் அதிகமாகப் பணத்தைச் செலுத்தவேண்டும். அவர்களை அரசாங்கத்தார் கண்ணுங் கருத்துமாய் எப்பொழுதும் மேற் பார்வையிட்டு வருகின்றனர்.

இவ் வியாபாரிகளின் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களிலும், வைத்தியசாலைகளிலும், ஓட்டல்களிலும் இராணுவத்திலும் கடைசியாகத் தான் இடம் கிடைக்கும். அவனது குழந்தைகளும் அவர்களின் கல்வி விஷயத்திலும், சாப்பாட்டு விஷயத்திலும், ஆடை விஷயத்திலும் தங்க இடவசதி விஷயத்திலும் பணத்தை அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது ஒவ்வொரு பகுதியிலிருந்தும் அரசாங்கம் ஓர் தனித்த வியாபாரியிடமிருந்து கூடுமானவரையில் பணத்தை எடுத்துக்கொள்ள ஆவலாகவுள்ளது. இவ் வியாபாரத் தன்மையானது அவர்களின் மிகவும் பெரிய விரோதியாக இருக்கின்றபடியால் இதை எவ்வாராவது இந் நாட்டில் தலையெடுக்க வொண்ணாமல் ஒழித்து விடுவதே அவர்களது முக்கிய கருத்தாகும். லெனின் கிராடில் சொந்தமாகச் சில்லரைக் கடை வைத்திருப்பவனும் கிடையாது. ஒருவருக்காவது சொந்தமாக வாடகைக்காரர்களும் இல்லை, சொந்தமான வீடுகளுமில்லை, ஒருவருக்காவது சொந்தமாயுள்ள ஒரு அசையாப் பொருளும் கிடையாது. ஒவ்வொரு சாமானும் அரசாங்கத்தினால் சுவாதீனமடையப்பெற்றுள்ளது. யாராவதொருவன் அரசாங்கத்தின் சட்டத்திற்கு மீறி

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க

சமதர்மத் தோழர்களே!

மக்கள் உயிர் வாழ்வதற்கு வேண்டியது உணவு. மானத்தோடு வாழ்வதற்கு வேண்டுவது உடை. தங்கிவாழ வீடு. அறிவாளியாக கல்வி. சுகமாக உண்டுகளிப்பதற்காக செய்ய வேண்டியிருப்பது வேலை. மற்ற உலகசுகபோகங்கள் எல்லாம் இவைகளுக்குப்பின்தான்.

ஆனால் இன்று நம்நாட்டு மக்களில் எவ்வளவு பேர் பசிபட்டினியால் வாடி வதங்கி உயிர் துறந்து கொண்டு வருகிறார்கள்! எத்தனைபேர் உடையின்றி கந்தல்களை உடுத்திக்கொண்டு காலங்கழிக்கிறார்கள்! அந்தகந்தல் கூட இல்லாதிருப்போரும் உண்டு. சூரிய வெப்பத்திலும், குளிரிலும் அவதிப்படுவோர்களை பிரதிதினமும் பார்த்துக்கொண்டுதானே வருகிறோம், தங்கிவாழ வீடு வசதியின்றி, ஒண்டுவதற்கு ஒட்டைக்குடிசையுமின்றி, அல்லலுற்று அவதிப்படுவோர் எண்ணிக்கை கணக்கிட்டு கூறமுடியாத வாரன்றோ இருக்கிறது. கல்வியறிவு பெறுதவர்கள் எத்தனைகோடி! சர்வசாதாரண சுகபோகங்களைக் கூட அனுபவிக்க வகையில்லாதிருப்பவர்கள் எத்தனைகோடி! வேலை அகப்படாது பசி பட்டினியால் வாடி ரோட்டோரங்களிலும், மரத்தடிகளிலும், சுடிகாடுகளிலும், ஒட்டிய வயிறுடனும், குழிந்த கண்களுடனும், எலும்பும் தோலுமாக அசைவற்ற பொருள்கள் போல்படுத்துக்கிடக்கும் பேர்கள் கணக்கிலடங்கா! இவர்களை கவனிப்பாரில்லையா என்ற கேள்வியை மேலே குறிப்பிட்ட காட்சிகளைக்கண்ட ஒரு பரிதாபி கேட்பானானால், இவர்களை கவனிப்பார் ஒருவருமில்லை என்றுதான் அவனுக்குப் பதில் கிடைக்கும்.

இவர்களைவிட சற்று உயர்ந்த நிலைமையிலுள்ள ஒரு கூட்டத்தை எடுத்துக்கொண்டு பார்ப்போம். கிராமங்களிலும் பட்டணங்களிலும் வசிக்கும் விவசாயிகள், தொழிலாளிகள் இவர்களோ! ஓட்டைக்குடிசைகளிலும்சிறிய அறைகளிலும், 5, 6. குழந்தை குட்டிகளுடன் வசித்துவருகிறார்கள். பீத்தப்பாய்தான் இருக்கும். ஆனால் தலையணைகூட இல்லாதிருக்கும். இவர்கள்வசிக்கும்வீடுகளில்சௌகரியமாகவோ, சுகாதாரமாகவோ வாழ எந்தவசதியுமில்லை. என்நாளும் குழந்தைகள் பிணிவாய்ப்பட்டு கஷ்டப்படுவது சர்வசாதாரணம். சமையலுக்கு வேண்டி பாத்திரங்கள் கூட சரிவர இருப்பதில்லை. மேஜை நாற்காலி பெஞ்சு முதலியவைகளை அவர்கள் வீடுகளில் காண்பதரிது.

இவர்களில் பலர் பிரதி தினமும் ஒரு வேளை (நாய்கள் கூட நக்காத) கூழ் அருந்துபவர்கள் உண்டு- இன்னும் பலர் ஒருவேளை சாப்பாடுமட்டும் சாப்பிடுவதுண்டுசிலரேதினம்2வேளை சாப்பிடக் கூடியவர்கள். உடை சம்பந்தமாகக் கவனிப்போமானால், சிலருக்கு ஒருதுணியும், பலருக்கு இரண்டு துணிகள் வீதமாவது இருக்கலாம். இவர்கள் குழந்தைகளில் கல்வி கற்பவர்கள் தொகை மிக சொற்பம். இந்தியன் தினசரி வருமானமோ சராசரி 2 அணாவிற்குள் என்று சொல்லப்படும்போது இவர்களுடையவாழ்க்கையைப்பற்றி கேட்பானேன்! திடீரென்று இவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுகையில் இவர்கள் எவ்விதம் ஜீவிக்கமுடியும், என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும்.

இவர்கள் பசியால் வருந்தாமல் வேறு என்ன செய்வார்? வேலையோ எங்கும் கிடைக்கவில்லை. உணவிற்கோ வழியில்லை. இதை எவனாவது போக்கவழி தேடினானா? வேலையிலிருந்து எவ்வித காரணமின்றி நீக்கப்பட்ட தொழிலாளிகள் தாங்கள் வாழ்க்கையை நடத்த லேவாதேவிக்காரர்களிடம் கடன் வாங்கி வாழவேண்டி இருக்கிறது. கடனை வட்டி முதலுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்கவேண்டு மென்பதற்காகவே மிகச்சொற்ப கூலி கொடுப்பதாக யார் சொன்னாலும் அதற்கும் கட்டுப்பட்டு அதிகநேரங் கூட உழைத்து அவதிப்படுகிறார்கள். சுருங்கக் கூறுமிடத்து லேவாதேவிக்காரர்களிடம் பட்டகடனை குறிப்பிட்டகாலத்தில் திருப்பிக்கொடுக்க முடியாது பலதவணைகள் சொல்கிறான். வேலையோ அகப்படுவதில்லை. அகப்பட்டாலும், தங்கள் குடும்ப வயிற்றைக்கழுவுவதற்கே அவர்கள் கூலி சரியாய்ப் போய் விடுவதால், பல தவணைகளில் கொடுப்பதாகச் சொன்ன படி கொடுக்க முடியாது அவதிப்படுகிறான். இதோடு கூட வேலை அகப்படாத போது, தனது குடும்பத்தார் சோற்றுக்கே லாட்ரி போடுவதைக்கண்டு மன முடைந்து ஐயோ! கடனை கொடுக்கவேண்டுமே! குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமே! எனகதறுகிறான்! மார்க்கம் ஒன்று மில்லாமையினால் மனக்குழப்பமடைந்து தற்கொலை செய்துகொள்கிறான் தொழிலாளி!

ஆனால் இங்கு நாம் கவனிக்கவேண்டியது தொழிலாளியின் தற்கொலைக்கு காரணஸ்தன் யார் என்பதே. யந்திரங்கள் மனிதன் சௌகரியத்திற்காக ஏற்பட்டது. ஆனால் அவைகளை முதலாளி தன் இஷ்டப்படி உபயோகிக்க ஆரம்பித்து விடுகிறான்.

நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் எல்லாம் சிறுபான்மையோர் கையில் சிக்கிக்கிடக்கிறது. அந்தமில் முதலாளிகள் கட்டுதிட்டமில்லாது, யாதொரு வரம்பிற்கு முட்படாது அவனவன் இஷ்டம்போல் அபரிமிதமாக செய்பொருளை உற்பத்தி செய்து விடுகிறான். செய் பொருள் மக்கள் தேவைக்கு மேலே பலமடங்கு அதிகப்படியாகமார்க்கட்டில் குவிந்து விடுகின்றன. மக்களுக்கு அவைகளை வாங்குவதற்கு கையில் காசில்லை. மேலும் அச்செய் பொருள்கள் முதலாளிகள் தங்கள் அபரிமிதமான லாபத்தைக் கருதியே செய்தபடியால் சாமான்கள் சரசமான மலிவான விலைக்கு ஜனங்களுக்குக் கிடைப்பதில்லை. ஜனங்கள் அப் பொருள்களை விலைஅதிகமாக இருப்பதால் வாங்கமுடிவதில்லை. முதலாளிகளோ லாபத்திற்குத்தான் விற்பதுஎன்றிருப்பதால் செய்பொருள்கள் வாங்குவாரற்று மார்கட்டில் ஏராளமாக தங்கிக் கிடக்கின்றன. இதைத்தான் 'கிளட்' என்பார்கள்.

இச்செய் பொருள்கள் வாங்குவாரற்றும், விற்பாரற்றும் மார்கட்டில் குவிந்து கிடப்பதால், புதிதாக மேற்படி சாமான்களைச் செய்ய ஆர்டர் இல்லாததால், தங்கள் தொழிற்சாலைகளை மூடிவிடுகின்றனர். தொழிற்சாலைகள் மூடப்படுவதால், லக்ஷக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி தெருவில் நிற்க வேண்டிவருகிறது. தொழிற்சாலைகள் சாத்தப்பட்டால், மேற்படி சாலைகளில் செய்யப்படும் சாமான்களையும் சாலைக்குவேண்டிய விளை பொருள்களையும் ஏற்றிக் கொண்டு போகும் ரயில்களுக்கு வேலை இல்லாமற்போகிறபடியால், பதினாயிரக்கணக்கான தொழிலாளிகளை ரயில்வே அதிகாரிகள், நெருக்கடி பெயரைச்சொல்லி ஆளை குறைக்கிறோமென்று கூறி தள்ளிவிடுகிறார்கள். இம்மாதிரியாகவே ஆங்காங்கு பல ஸ்தாபனங்களினின்று பலர் நீக்கப்படுகிறார்கள். நெருக்கடியின் காரணமாக நீக்கப்பட்டவர்கள் தங்கள் வயிற்றைக்கழுவ, வேலையைத்தேடி எங்கு சென்றாலும், நெருக்கடி வேலையில்லை என்ற கூக்குரலைத்தான் கேட்கிறார்கள். பிழைப்பதற்கு வழியில்லாது கடன் வாங்குகிறார்கள். அதைத்திருப்பிக்கொடுக்க முடியாததோடு மட்டுமல்லாது, பசிபட்டினியாலும் வாடி ஒன்றுமேவிளங்காது பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள் பரிதாபத்திற்குறிய தொழிலாளிகள்!

முதலாளிகளின் முட்டாள்தனமே இவர்கள் தற்கொலைக்கு காரணமாகும். திருட்டு, கொலை, கொள்ளை, முதலியவைகள் கூட தாங்கொணாபசிக் கொடுமையை போக்க மார்க்க மேற்படாத காரணத்தாலேயே நடக்கிறது.

முதலாளிகள் தொழிலாளிகளுக்குள்ள சம்பளத்தை இரட்டித்துக் கொடுத்துப் பார்க்கட்டும். முதலாளிகளும் கட்டுதிட்டங்களுக்கடங்கி, அவர்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு கணக்குக்வழக்கில்லாது செய்பொருள்களை செய்யாது மக்களுக்கு வேண்டிய அளவு செய் பொருளை செய்வார்களானால் இன்று உலகில் உரங்கிக் கிடக்கும் தொழிற்சாலைகள் இரண்டு மடங்கு வேலைசெய்யும். ஜனங்கள் கையில் காசு இருக்குமாதலால் தங்களுக்கு வேண்டியவைகளை எல்லாம் தாராளமாக வாங்குவார்கள். ரயில்போக்குவரத்து நெருக்கடிக்குமுன் இருந்ததை விட இரட்டிப்பு வேலை செய்யும் லக்ஷக்கணக்கான தொழிலாளிகள் வேலைக்கமர்த்தப்படுவார்கள். நெருக்கடி பறந்து போய் விடும். வியாபார மந்தம் தலைகாட்டாது ஓடிவிடும். தொழிலாளர்களும் வேலையிலிருந்து தள்ளப்படவேண்டிய அவசியமேஇராது. ஆனால் இதை முதலாளிகள் யோசித்துப்பார்ப்பது மில்லை. சொன்னாலும் கேட்பார்யாருமில்லை. முதலாளி அரசாங்கத்தின் கீழ் மனிதர்கள் மனிதர்களாக வாழுவதே கிடையாது. பன்றி, நாய், கழுதை, எருமைமாடு முதலியவைகள் நிலைமை எவ்வளவோ பங்கு மேலான வாழ்க்கை எனலாம் ஆனால் மனிதர் வாழ்க்கை முதலாளி அரசாங்கத்தின் கீழ் இவைகளை விடமோசமே!

தொழிலாளர்கள் இன்புற்று வாழ வேண்டுமானல் அவர்களை எந்தகாரணத்தைக் கொண்டும் வேலையிலிருந்து நீக்கக்கூடாது. அவர்களுக்கு போதுமான (சரியான-நியாயமான-ஒழுங்கான-) கூலிகொடுக்கவேண்டும் இந்த இரண்டு அற்பவிஷயங்கள் கூட தொழிற்சாலைகள் சிறுபான்மையோர் கைவசமிருக்கையில் எதிர்பார்க்க முடியாது. தொழிலாளர்கள் இன்புற்று வாழ வேண்டுமானல் நாட்டிலுள்ள தொழிற்சாலைகள், ரயில்வேக்கள், போக்கு வரத்து சாதனங்கள்யாவும் பொது மக்களுக்கு உரிமையாக்கப் படவேண்டும்.

இதுபோன்றே நாட்டிலுள்ள விவசாய நிலங்கள் காடுகள், ஸ்தாவர சொத்துக்கள் யாவும் பொது மக்களுக்கு உரிமையாக்கப்படவேண்டும். ஏனெனில் இன்று விவசாயிகள் வருஷத்தில் சில மாதங்களே நிலச்சுவான் தார்களிடத்தில் 12 13 14 15 16 மணி நேரம் ரத்த வியர்வை சொட்ட கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். ஏதோ கிடைக்கும்சொற்ப கூலி அந்த மாதத்தோடு சரி. மற்ற மாதங்களில் கூழ்மொந்தைகூட இல்லாது- நொந்து நோவென்றுஅலருகிறார்கள். ஆனால் ஜமீன்தார்களோ தொந்தியைத்தடவித் தடவிப் பார்த்து உண்டுகளித்து உலகசுகபோகங்களை சகலத்தையும் அனுபவிப்பதோடு மட்டுமல்லாது விவசாயிகளின் உழைப்பின் ஊதியத்தைக் கொண்டு முன் 1000 வேலி இருக்குமானல் இப்பொழுது அதாவது ஒரு வருடத்திற்குள் இன்னுமொருநூறுவேலிநிலத்தை வாங்குகிறேன்! தனக்குசொந்தமானதுஎன பெருமை பாராட்டிக்கொள்கிறான். ஆனல் அவன் தனது என்பதைத் பிறக்கும் போதும் கொண்டுவந்ததில்லை இறந்தபிறகும் கொண்டு போவதில்லை.

விவசாயிகளோ, தொழிலாளிகளோ, சரீரவேலைக்காரர்களோ, யாராயிருந்தாலும் அவரவர்கள் உழைப்பின் முழுப்பயனை சமதர்ம ஆக்ஷியில் ஒன்றில் தான் பெறமுடியும் என அறிக. சமதர்ம ஆக்ஷியில் தான் எல்லோரும்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க

கொடுங்கோன்மை.

இது எப்பொழுது ஒழியும்?

(சென்ற வாரத்தொடர்ச்சி)

(T. D. கோபால்)

"இந்த உலகத்தில் பணக்காரர்களாகயிருந்துவரக்கூடிய மக்கள் யாவரும் ஈவும், இறக்கமுமற்றவர்களென்பதும், தயையும் தாட்சணியமுமற்றவர்களென்பதும், பாராமுகமாய் இருக்கக் கூடியவர்களென்பதும், தைரியமற்றவர்களென்பதும், பயமுள்ளவர்களென்பதும், கொடுமைவாய்ந்தவர்களென்பது மாகியவைகளுமேதான் இப் பத்திரிகையின் அடிப்படையான கருத்தாகும். இந்த ஒவ்வொரு வாக்கியத்தையும் நான் அப்படியே ஆமோதிக்க வேண்டியவனாகயிருக்கின்றேன். இப் பத்திரிகையில்காணப்படும் விஷயங்களில் சிலவற்றை நான் உனக்குப் படித்து, உரைக்கட்டுமா? சந்தோஷம்! சரி!! அப்படியே நான் உனக்கு வாசித்துரைக்கின்றேன்."

குடியானவர்கள்.

உலகிலுள்ள மக்கள் உயிருடன் வாழுவதற்கு இன்றியமையாததான உணவுபதார்த்தங்களை உழுது, பயிரிட்டு உற்பத்தி செய்யக்கூடிய மக்களே தான் குடியானவர்களாவார்கள். குடியானவர்களெனக் கூறப்பட்டுவரும்படியான மக்களே இல்லாதிருப்பார்களானால், உலகிலுள்ள அத்தனை மக்களும் பசிக் கொடுமையால் பாதிக்கப்படவே வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக குடியானவர்களின் குறைகளைப் பற்றி மிக்க விமரிசையாகவும், படாடோபமாகவும் பத்திரிகைகளில் எழுதப்பட்டு, பத்திரிகை வாசிக்கும் உலகத்தினரின் மனது கவர்ச்சி செய்யப் பட்டே வந்திருக்கின்றது. இக் குடியானவர்களின் நிலைமையானது பத்திரிகைகளில் மட்டுமே தான் விளக்கமாக விவரித்துக் காட்டப்பட்டதே யல்லாமல், அந் நிலைமைக் கேற்ற விமோசனம் அவர்களுக்கேற்பட்டுவிட்டதாக கூறிவிடுவதற்கில்லை. விமோசனத்திற்குப் பதிலாக அவர்கள் யாவரும் தங்களுடைய முன் இருந்த நிலைமையிலிருந்து அதிகப்படியாகவே கீழே இறங்கி நாளடைவில் தரித்திரர்களாகி, இப்பொழுது கடனாளிகளாகயிருந்து கொண்டு வருகின்றார்கள். இவர்கள் சரிவர பாடுபட்டு, உழைக்காததினாலோ, அல்லது காலாகாலங்களில் வெள்ளாமை விர்த்தியாகாமல்நாசமாய்ப்போய் விட்டதினாலோதான் இவர்களுக்கு இத்தகைய இழிவான நிலைமையேற்பட்டு விட்டதென கூறிவிட முடியாது-

உலக மக்களின் உயிர் ஜீவித்திருப்பதற்காகவேண்டி, உழைத்துப் பாடுபடும் பாட்டாளிகளின் உண்மையான உழைப்பெல்லாம், அவர்களுடைய பாட்டின் பலனெல்லாம், அவர்களுடைய நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபடுவதின் பயனெல்லாம், மக்களின் உபயோகத்திற்காக வேண்டியும், மக்களின் நன்மைக்காக வேண்டியும் ஒரு வித சிறு பொருளேனும் உற்பத்தி செய்வதற்கு சிறிதும் சாமர்த்தியமும், வல்லமையுமில்லாத ஒரு சில சுயநலக் கூட்டத்தாரால் கொள்ளையிடப்பட்டு வருகின்றது. ஏழைக்குடியானவர்களின் நிலைமை இத்தகையபரிதாபகரமானஸ்திதியிலிருந்துவருவதினால்தான், உலகின் நாலா பக்கங்களிலுமிருந்துநிலத்தின் வரியை குறைக்க வேண்டுமெனவும்,வரிவஜாசெய்யவேண்டுமென்பதுமாகிய கூக்குரல் கேட்கப்படுகின்றது. ஒரு தேசத்தின் பற்பல பாகங்களிலும் பல்வேறு விளை பொருள்கள் விளைவிக்கப்படுகின்றன: அப்படிவிளைவிக்கப்பட்டு வந்தபோதிலும் கூட,தேசத்திலுள்ள எல்லாக் குடியானவர்களின் நிலைமையும், ஏற்றத் தாழ்வின்றி சமமாகவே யிருந்து வருகின்றது. இத்தகைய ஓர் வித நிலைமையால் அக் குடியானவர்களின் ஊக்கமும், முயற்சியும் குன்றி, வருவதுடன், அவர்களுடைய தைரியமும் பலவீனமடைந்து வருகின்றது. இத்தகைய நிலைமையிலேயே அவர்கள் முழு திருப்தியுடன் சதா இருந்துகொண்டு வருவார்களென நாம் எதிர் பார்த்துக் கொண்டிருப்பதானது அறிவுடைய செய்கையாகுமா? எப்பொழுதாகிலும் அவர்கள் தங்களுடைய நிலைமையை சீர்திருத்திக் கொள்ளுவதற்காக வேண்டி முயற்சி செய்ய மாட்டார்கள்? அல்லது அதற்காக அவர்கள் போர் கவசம் பூண்டு முன் அணியில் நின்று, போர் புரியத் தான் துணிய மாட்டார்களா?

பொதுவாகக் கூறுமிடத்து உலகில் உள்ள எல்லா மக்களுமே அரிசியைஓர் உணவுப்பொருளாக உபயோகிக்கின்றார்கள். ஆகையினால், அரிசிக்கு எப்பொழுதும் அவசியமிருந்து கொண்டே யிருக்கின்றது. பணத்தையும் அதிகப்படியான சிரேகசிரமத்தையும், செலவு செய்து குடியானவன் நெற்பயிரை விளைவிக்கின்றான். அவ் வாறிருந்த போதிலும் கூட, அவன் என்னமோ ஓர் சிறிய பாகத்தையேதான் அடைகின்றான். சில சமயத்தில் இந்தக் கொஞ்சபாகமும் அவனுக்கு இல்லாமலும் கூட போய் விடுகின்றது. ஓர் குடியானவன் ஓர் வெள்ளாமையை விளைவிப்பதற்காக செலவு செய்யப்படும் தொகைகளை நீக்கிமீதியை கணக்குப் பார்ப்போமேயானால், அதாவது ஒரு குடியானவனுக்கு அவனுடைய செலவு அழிவெல்லாம் நீக்கிக் கணக்குப் பார்ப்போமேயானால் மீதி யிருக்கக்கூடியவை அவனுடைய செலவுக்கும் அவனுடைய குடும்பத்தின் செலவுக்கும், அவன் தன்னுடைய பூமியை அடமானம் வைத்து வாங்கிய தொகைக்கு வட்டி செலுத்துவதற்குமே அனேக சந்தர்ப்பங்களில் போதாமல் போய் விடுகின்றது. அரிசியை உணவாக உண்ணும் மக்கள் யாவரும், அதிகப்படியான விலை கொடுத்தே அரிசியை வாங்க வேண்டியவர்களாகயிருக்கின்றார்கள். ஏழைத் தொழிலாளிகள் தினம் சம்பாதிக்கக் கூடிய தொகைகளின் அளவுக்குத் தகுந்தாப்போலும், அவர்களுடைய வருமானத்திற்கேற்றாப் போலும் அரிசி யானது கடைகளிலே விற்கப்படுமேயானால் அப்பொழுது இலட்சக் கணக்கான மக்கள் நல்ல அரிசியைவாங்கி தங்களுடைய பசிப்பிணியை ஆற்றிக் கொள்ள முழுமனதுடனும் சம்மதிப்பார்கள். பெரிய பெரிய பட்டணங்களில் வசிக்கக் கூடிய மக்களுக்கு, அவர்களுக்கு வேண்டிய உணவு பதார்த்தங்கள் யாவும் கிராமாந்திரங்களிலிருந்தே ஏற்றுமதி செய்யப் படுகின்றன. நமது மாகாணத்தைப் பொறுத்த வரையிலும், தஞ்சை ஜில்லாவில் தான் நெற்பயிர் அதிகமாக விளைவிக்கப்படுகின்றது. இக் காரணத்தாலேயே தஞ்சை ஜில்லாவானது "தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம்" எனவும் கூறப்பட்டு வருகின்றது. ஆனால் தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு பண்ணையும் இப்பொழுது அடமானம் வைக்கப்பட்டிருப்பதாகத் தான் கூறப்படவேண்டும். தற்காலம் குடியானவர்களின் நிலைமையானது அதிக மோசமாகத்தானிருந்துவருகிறதென்பதை யாவருமே ஒத்துக்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய தற்கால நிலைமையைப்பற்றி சுருக்கமாக இரண்டொரு உதாரணங்களை மட்டும் கீழே குறிப்பிடுகின்றோம்:—

தஞ்சையை யடுத்த கும்பகோணத்தில் இராமச்சந்திரன் ஓர்பெரிய குடித்தனக்காரன். அவனுக்கு ஐந்து ஏக்கர் நஞ்சை உண்டு. 1924ல் அவனுக்கு ஒருபைசாவேனும் கடன் கிடையாது. ஆனால் இன்றைபதினமோ, 1934ல், அந்த ஐந்து ஏக்கர்நிலத்திலும் ஒரு அடி நிலங்கூட அவனுடையதென உரைப்பதற்கில்லை. ஆனால் கடந்த இந்த பத்துவருடங்களிலும் ஒரு வருடமேனும் தவறாமல் அவன் அந்த ஐந்து ஏக்கர் நிலத்திலும் சாகுபடி செய்து கொண்டேதான் வந்திருக்கின்றான். வட்டியும், வரியும்சில சந்தர்ப்பங்களில்பயிர்விளையாமல் போனதுமே அவனுடைய அந்த ஐந்து ஏக்கர் நிலத்தையும் கொள்ளைகொண்டு விட்டன.

மாயவரத்தை அடுத்த சித்தக்காட்டில் முருகேசன் என்பவன் ஓர்பிரபல குடித்தனக்காரன். அவனுக்குச் சொந்தமாக ஓர் அழகிய வீடும், பதினைந்து ஏக்கர் நிலமும் உண்டு. மூன்று வருடங்களுக்கு முன் அந்த அழகிய பெரியவீடும் பதினைந்து ஏக்கர் நிலமும் அவனுடையதாக விருந்தன. ஆனால் இன்றோ அந்த பதினைந்து ஏக்கர் நிலத்திலும் விளையக்கூடிய வெள்ளாமையினால், அந்த பூமியும் வீடும் அடமானமாகவைத்து வாங்கியத் தொகைக்கு வட்டி செலுத்திக்கொண்டு வருவதற்குக்கூட போதவில்லை. சுருக்கமாககூறுமிடத்து இப்பொழுது அவனுக்கு சொந்தமான நிலமோ அல்லது வீடோ இல்லையென்பதாகத்தான் கூறவேண்டும்.

மாயவரத்திலேயே குடியிருக்கும் சங்கரன் என்பவன் ஓர் மிராசுதாரன் நான்இந்த ஊருக்குசுமார் ஐந்து வருடங்களுக்குமுன் என்

தொடர்ச்சி 14ம் பக்கம்பார்க்க

தோழர் ஈ. வெ. ரா. ஈரோடு விஜயம்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், ராஜ மகேந்திரம் சிறையிலிருந்து 15ந்தேதி விடுதலைபெற்று 16ந்தேதிசென்னை வந்து, 17ந்தேதி அதிகாலை நீலகிரி மெயிலில்ஈரோடு வந்து சேர்ந்தார்.

உள்ளூர் பிரமுகர்கள் பலர் ஸ்டேஷனுக்குச் சென்று வரவேற்று, வீட்டுக்கு அழைத்துச்சென்றனர். வீட்டில் வந்து சென்றவர்கள் பலர். வெளியூரிலிருந்து பலர் விஜயம் செய்திருந்ததினால்,மாலையில்ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கத்தில் ஓர் பெரிய பாராட்டுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாலை 6மணிக்கு சங்கக் கட்டிட மண்டபம் நிறைய இந்து முஸ்லீம் முதலிய பல வகுப்பினரும் பெண்களும் வந்திருந்தார்கள். அவர்களில் முன்னணியில் இருந்தவர்கள்,—

தோழர்கள் எஸ் இராமசாமி, மாயவரம் சி. நடராஜன் டாக்டர்எம்.கிருஷ்ணசாமி,வல்லம வாசுதேவன்,ஏ. இரத்தினசபாபதி, எஸ். வி. லிங்கம், பாப்ஜான், அப்துல் அஜீஸ். ஈ. வீ. கிருஷ்ணசாமி, முத்தலிப், ராஜாக், சுக்கூர், திருச்செங்கோடு எஸ். கே. வரதராஜலு, கோவை சங்கரலிங்கம், ஆர். அன்ன பூரணி, பா. மகாலக்ஷிமி மஞ்சுளாபாய் கே. ராம சுந்தரம், ராஜம் இன்னும் பலருமாவார்கள்.

தோழர் அன்னபூரணி அவர்கள் தலைமையில் கூட்டம் துவக்கப்பட்டு தோழர்கள் டாக்டர் கிருஷ்ணசாமி, அ இரத்தினசபாபதி, ஈஸ்வரர், ராஜம்மாள் முதலானவர்கள் பேசினார்கள். முஸ்லீம் வாலிபர் சார்பாக என்று தோழர் டி கே. பூப்ஜான் அவர்கள், தோழர் ஈ. வெ. ரா. அவர்களைப் பாராட்டி ஓர் நீண்ட பத்திரம் வாசித்துக் கொடுத்தார். இவற்றிற்கு பதில் அளிக்கும் முறையில் தோழர் ஈ. வெ. ரா. பேசியதாவது:—

தோழர்களே!

நான் சிறைவாசம் சென்றுவிட்டு வந்ததைப்பாராட்டுவதற்காக என்று இக்கூட்டம் கூட்டப்பட்டு என்னைப்பற்றி பலர் பலவிதமாகப் புகழ்ந்து

பாராட்டுக் கூட்டத்தில் ஈ. வெ. ரா. பிரசங்கம்.

பேசி இருக்கிறார்கள். இது ஒரு வித பழக்க வழக்கத்தை அனுசரித்திருப்பதாக மாத்திரம் நான் கருதுகிறேனே ஒழிய இதில் ஏதாவது நல்ல பொருள் இருப்பதாகநான் கருத வில்லை. முதலாவதாக இப்பொழுது நான் மற்றவர்களைப் போல் சிறை செல்ல வேண்டுமென்று கருதி நானாக சிறைக்குப் போகவில்லை. ஆனால் சிறைக்குப் போகக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், அதற்காக பயந்து பின் வாங்காமல் அதையும் ஒரு நன்மையாகவே பயன் படுத்திக் கொள்ளலாமென்பதைக் காட்டுவதற்காகவேநான் சிறை செல்ல நேர்ந்தது.

அதாவது குடிஅரசு பத்திரிகையில் என்னால் எழுதப்பட்ட ஒரு சாதாரணமானதும், சப்பையானதுமான வியாசத்திற்காகத்தான் நான் சிறைக்குப் போக நேரிட்டதே தவிர, மற்றப்படி செல்லக்தக்க ஒரு சரியான காரியம் செய்துவிட்டு சிறைக்குப் போக வில்லை. சர்க்கார் இந்தக் "குடி அரசு"ப் பத்திரிகையின் பழைய இதழ்களைப் புரட்டிப் பார்த்தால்என்னை வருடக்கணக்காய் தண்டிக்கக்கூடியதும், நாடு கடத்தக்கூடியதுமான வியாசங்கள் நூற்றுக்கணக்காக தென்படலாம். ஆனால் அவர்கள் அந்தக்காலத்திலெல்லாம் கவனித்ததாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் ஏன் கவனிக்கவில்லை என்பதை இப்போது நான் கவனித்துப்பார்த்தால் காங்கிரசிற்கு பாமர ஜனங்களிடத்தில் இருந்த செல்வாக்கின்பயனாய், நமது வியாசங்களை பொது ஜனங்கள் லட்சியம் செய்யமாட்டார்கள் என்கின்ற தைரியத்தால் சர்க்கார் அப்பொழுது சும்மா இருந்தார்கள் என்று தோன்றுகிறது.

ஆனால் இப்பொழுது இப்படிப் பட்ட சிறிய வியாசங்களையும் கண்டு, இவ்வளவு வல்லமை பொருந்திய சர்க்கார் பயப்படும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டதென்பது நன்றாய்த் தெரிகிறது.

இதிலிருந்து நாம் என்ன நினைக்க வேண்டி இருக்கிறதென்றால் நமது அபிப்பிராயத்தை மக்கள் மதிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்றும் சுயமரியாதை கொள்கையை ஜனங்கள் ஆதரிக்கிறார்கள் என்றும், சர்க்கார் இப்போது உணர்வதாகத்தெரிகிறது அன்றியும் மற்றும் பல புதிய புதிய தீவிரக் கொள்கைகளையும் ஜனங்கள் வரவேற்கிறார்கள் என்பதும் தெரிகிறது. இதுவரை நமது நாட்டில் இருந்து வந்த அபிப்பிராயங்கள் எல்லாம் "வெள்ளைக்காரருக்கு இந் நாட்டில் என்ன வேலை அவர்களுக்கு ஏன் ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளம், கருப்பு மனிதனுக்கு ஏன் நூற்றுக்கணக்கான பத்துக் கணக்கான ரூபாய்கள் சம்பளம்? அவர்களுக்கு ஏன் பெரிய அதிகாரம், நமக்கு ஏன் சின்ன அதிகாரம் என்பதுபோன்ற பிரச்னைகளே தேசீயம் என்னும் பேரால் முக்கியமாய் இருந்து வந்தது. இதன் பயனாய் அரசாங்கத்தார்களும் இங்குள்ள பணக்காரர் படித்தவர் மேல் ஜாதிக்காரர் ஆகிய ஒரு சிறு கூட்டத்தாருக்கு மாத்திரம்ஏதாவதுவாய்ப் பூசி மக்களின் "தேசீய அபிலாஷைகளை" திருப்தி செய்து வந்து கொண்டும் இருந்ததால் பாமர ஜனங்களின் எண்ணம், உணர்ச்சி, ஊக்கம் எல்லாம் அதிலேயே ஈடுபட்டுக் கிடந்தது. ஆனால் இப்பொழுதோ நாட்டில் வரவர அந்த எண்ணங்கள் மறையத்தொடங்கி விட்டன. அவை வேறு விதமாக பரிணமிக்க ஆரம்பித்து விட்டன.

எப்படிஎன்றால் "வெள்ளையனுக்கு ஏன்1000. 5000 ரூபாய் சம்பளங்கள், கருப்பனுக்கு 100, 50, 10, 5ரூபாய் வீதம் சம்பளம் என்பது போய், மனித சமூகத்தில் யாராயிருந்தாலும் ஒருவனுக்கு ஏன் 5000, 10000 ரூபாய் சம்பளம், மற்றவனுக்கு ஏன் 5ரூபாய் 10ரூபாய் சம்பளம், என்கின்ற உணர்ச்சி தோன்றி எல்லா மக்களும்; ஜாதி, மதம், தேசம் என்கின்ற பேதமும் பிரிவுமில்லாமல் சகலரும் சமமாய் பாடுபட வேண்டும், பயனை சமமாய் அடைய வேண்டும் என்கின்றதான ஒரு சமதர்ம உணர்ச்சியில் திரும்பி விட்டது. இந்த நிலைமையானது ஆட்சிக்காரருக்குமாத்திரமோ,அல்லது அரசாங்கத் உத்தியோகஸ்தருக்கு மாத்திரமோ விரோதமானதென்றோ, அடக்கி விட வேண்டியதென்றோ தோன்றாமல் நம் நாட்டில் உள்ள எல்லா பணக்காரர்களுக்கும், எல்லா மேல்ஜாதிக்காரர்களுக்கும் (அதாவது பாடுபடாமல் வயிர்வளர்க்கவும், போகபோக்கியம் அனுபவிக்கவும் கருதும் மக்களுக்கும்) படித்தவர்கள் என்கின்ற கூட்டத்திற்கும் தோன்றிவிட்டதுடன். இவர்களால் வாழ்ந்து வந்த மதப்புரோகிதர்கள் என்பவர்களுக்கும் தோன்றிவிட்டது. ஆதலால் இந்தக் கூட்டத்தார்கள் எல்லோருமே அக்கொள்கைக்கு எதிரிகளாய் இருப்பதில் நான் அதிசயப்படவில்லை என்பதோடு, இதற்காக நான் ஜெயிலுக்குப்போக நேரிட்டதிலும் அதிசயமில்லை.

நிற்க இப்பொழுதுள்ள நிலையில் ஜெயிலில் அதிக கஷ்டமில்லை. முன்பு சிறிது கஷ்டம் இருந்தது உண்மைதான். 1921ம் வருஷத்தில் நானும், இங்குள்ள தோழர்கள் ஈஸ்வரன், ஜெயா, முதலியவர்கள் கைதியாக்கப் பட்டபோது, கையில் குட்டை போடுவதும், துன்பப்படுத்துவதுமானதொல்லைகள்மிகுந்திருந்தன. அந்தக்காலத்தில் பட்ட கஷ்டங்கள்இப்பொழுதொன்றுமில்லை. அப்பொழுது இங்குள்ள தோழர் ஜெயாவை ஜெயிலில் இருந்து வண்டியில் போட்டு வெளியில் அழைத்து வரப்பட்டது. உயிர் பிழைப்பாரோ என்றுகூட சந்தேகிக்கப்பட்டது. இப்பொழுது ஜெயிலில் கஷ்டமில்லை என்பதோடு,என் போன்றவர்கள் அங்கு வெகு மரியாதையாக சாமி, பாபுஜி என்று உள்ளி

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

சோஷிலிசம்.

(சமதர்மம்)

கட்டுரை 2.

[சோஷிலிஸ்ட்]

இக்கட்டுரையில் ஒரு பள்ளிக்கூடமாணவன், தான் கண்ட காட்சியிலிருந்து உலகில் நடந்துவரும் அநீதிகளை உணர்ந்து, அவைகளை போக்க சமதர்மம் ஒன்றே சிறந்தது என முடிவுகாணும் முறையில் உலகத்தில் இருந்துவரும் சமூக அமைப்பையும் சமதர்மத்தின் உயர்வையும் வெளியிடுவதாகும். (ப-ர்)

பத்தாவது வகுப்பில்படிக்கும் பத்தொன்பது வயதுடைய வாலிபனொருவன் ஒருநாள் அதிகாலையில் தனதுபொழுது போக்கிற்காக, வாசகசாலைக்குச்சென்று திரும்பி வருகிறான். இவ்வாலிபன் கடவுள் நம்பிக்கையும், மதபக்தியையும் தேசபக்தியையும் உடையவன். ஜனசமூகத்திற்குத்தன்னால் இயன்ற உதவியைசெய்யவேண்டுமென்ற ஜீவகாருண்யமனத்தினன். ருஷ்ய சமதர்மத்தை பற்றிசிறிதுகேள்விபட்டிருக்கிறான். ஆனால் அந்நாட்டில் சமதர்மம் நிலைநாட்டப்படுவதிலிருந்து மனித சமூகத்தில் ஒழுக்கங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதாககேள்விப்பட்டிருந்தான்- சமதர்மம் பெண்களை பொது சொத்தாக ஆக்கிவிட்டதாகசொல்லப்படும் பொய்வதந்திகளையே பெரிதும் கேள்விப்பட்டான். ருஷ்யஜனங்கள் இவைகளில் வெறுப்பு கொண்டு பழைய மத நம்பிக்கையையும் சமூக அமைப்பையும் விரும்புவதாகவும் கேள்விபட்டான். இந்நிலை இவ்வாலிபனுக்கு சமதர்மத்தில் பணிவாற்றி தலையையோ ஆர்வத்தையோ உண்டாக்கவில்லை. சமதர்மத்தைப் பற்றி இத்தகைய மனப்பான்மையைக்கொண்ட இவன், வரும்வழியில்புழுதியடைந்த ஒருமனிதஉருவம் கீழே கிடப்பதைக் கண்டான். அருகில் நெருங்கினான். முழு நிர்வாணமாய் அழுக்கு படிந்த தேகத்தை உடைய ஒருவன் களைப்புற்று கீழே கிடப்பதைக் கண்டான். வாலிபனுக்கு இயற்கையாக உள்ள மனிதாபிமானம் எழுந்தது. "அப்பா உனக்கென்ன தேவை" என்று கேட்டான். கீழேகிடந்தமனிதன் தனதுமெலிய குரலில் "தண்ணி தண்ணி" என்றுசொன்னான்! அந்தோ! வாலிபன் என்செய்வான்! சமீபத்தில்தண்ணீர்கிடைக்க வழியில்லை. இருப்பினும் அருகில் உள்ள தோட்டத்தின் உள்ளே சென்றான். அங்கு கிடந்த ஓட்டை சட்டியில் சிறிது தண்ணீர் கொண்டுவந்தான். கீழே கிடந்த மனிதனது வலக்கையால் தூக்கி தனது மார்போடு அணைத்து இடது கையால் தண்ணீரை கொடுத்தான்' ஆவலுடன் தண்ணீரை குடித்த அப்பரிதாபத்திற்குரிய மனிதன் மறு நிமிடம் தனது கண்ணைமூடி கீழேசாய்ந்தான்; சாய்ந்த நேரத்திலேயே இறந்தான்

வாலிபன் தான்கண்ட காட்சி மெய்யா பொய்யா என சிந்தித்தான். அவனது தேகம் துடித்தது. அதிக நேரம் அங்குதாமதித்தால் அனுவசியமான கஷ்டங்களுக்கு ஆளாக நேரிடும் என உணர்ந்தான். தன் வீட்டையடைந்தான்.

"ஏ கருணாகரக்கடவுளே! நான் இன்று கண்டகாட்சி என்ன ஐயோ! என்ன அநியாயமான மரணம். காற்றுமழை வெயில் புழுதி எதையும் பாராது அங்கு கிடந்த காலத்தில் அம்மனிதன் என்ன நினைத்தானோ? இந்நிலைக்கு அவனை ஆளாக்கிய மனித சமூகத்தையே சபித்திருக்கமாட்டானோ? நிர்கதியாக இம்மனிதன் அங்கு கிடக்கும் போது அந்தவழியாக கார்களிலும் இரதவண்டிகளிலும் உல்லாசமாக சென்றவர்களைப்பார்த்து இப்பரிதாப நிலையில் உள்ளவன்என்ன தான் நினைத்திருப்பான்? தனது வாழ்நாள் பூராவும் உழைத்தும் இந்நிலையில் தான் அனாதையாகவும், சிறிது கூட உழைக்காது சோம்பேறியாக வாழும் சிலர் செளக்கியமாக வாழ்ந்து சுகமான முடிவை அடைவதைப்பற்றி ஏன் என்று சிந்தித்து இருப்பானல்லவா என்றுபலவாறு நமது வாலிபதோழன் சிந்தித்தான்-

ஆபத்பாந்தவனும் அனாதரக்ஷகனும் இருப்பதாகச் சொல்லப்படும் கடவுள் இவனை இந்நிலைக்கு ஆளாக்கியிருக்க முடியுமா? இதுகடவுள் சித்தம் தானா? அல்லது மனித சமூகத்தின் அஜாக்கிரதையா? என்ற சந்தேகங்கள் தோன்றவேவாலிபன்விழித்தான்.

இதுகடவுள் செயல் எனச் சொல்வது புரட்டு. தேவையான நீர்வளம் நிலவளம் இருக்கிறது. எவனும் தன்னால் இயன்ற அளவு உழைக்கவும் தயாராக இருக்கிறான். உலகத்தில் இன்று உள்ள பொருள் நிலையிலேயே எல்லோருக்கும் உணவு கிடைக்கச்செய்யலாம். ஒரு சிலர் பெரிதும் உழைக்கவும் ஒருசிலர் உழைக்காமலேயே வாழவும் உள்ள நிலை மாறுதல்அடையவேண்டுமென்று முடிவு கொண்டான்.

இது மாறுதலை விரும்பும் வாலிப மாணவனான எனது விருப்பம் ஈடேறும் எனசிந்தித்தான். இன்றைய நிலையில் சகலசம்பத்துகளுக்கும்அதிகாரியாகவே வாழும் குபேரர்கள் எனது வார்த்தைக்கு செவி சாய்ப்பார்களா? என ஏங்கினான்.

இந்தியா பூராவையும்கண்விழிப்படையச்செய்த புத்தரைப்போலவோ, அரேபியாநாட்டின் அக்கிரமங்களைப்போக்கி சர்வ ஜன சகோதரத்துவத்தை தோற்றுவித்த முகம்மதுவை போலவோ நான் ஆகமுடியாதா என ஆர்வங்கொண்டான்.

எனவே நமது வாலிபதோழன் "சமதர்மம்" நாட்டில் நிலைக்க வேண்டுமென ஆசைகொண்டான். சமதர்மம்நிலவ வேண்டுமானால், சர்வ சொத்தும் பொதுவாக்கப்படவேண்டுமென்றும், சர்வஜனங்களும், ஆண்பெண் இருபாலரும் உழைக்கவேண்டுமென்றும் முடிவு செய்தான். ஆண்பெண் இருபாலரும் உழைப்பதால் குழந்தைகளை காப்பதற்கென தனிஸ்தாபனங்களும் பொதுஉணவுச்சாலைகளும் அவசியமெனஉணர்ந்தான்.

இவ்வாலிபனின்நியாயமான இவ்வெண்ணங்கள்தான் சமதர்மத்திற்கு வழிகாட்டியாக ஒரு அளவிற்கு சொல்லலாம். இனி அடுத்து வரும் கட்டுரைகளில்"சமதர்மம்" அல்லது"சோஷியலிசம்" என்பதின்தத்துவத்தை அறிஞர்கள் எவ்வாறுகருதுகிறார்களென்பதையும், சமதர்மக்கொள்கைகளும் திட்டங்களும் தென்னாட்டைப் பொருத்த மட்டில் எவ்வப்பொழுது எவ்வகையில் எப்படி எப்படி பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைப் பற்றி ஆராய்வோம்.

மதுரை சுயமரியாதை சங்கத்தில் போலீசார் சோதனை

ரிகார்டுகளுக்கு காப்பி எடுக்கப்பட்டது.

(நமது நிருபர்)

மதுரை மே 13—

சென்னை சி. ஐ- டி இலாகாவைச்சேர்ந்த போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் தோழர் பால்சிங்கு (நாடார்) அவர்களும், மதுரை நகர ஸி, ஐ,டி, சப்இன்ஸ்பெக்டர் தோழர் பகவந்த(ராவ்) அவர்களும் ஏட் கன்னையா (நாயுடு) அவர்களும் மதுரை சுயமரியாதை சங்கத்துக்கு மேமீ 19௳ காலை 10மணிக்கு வந்தார்கள் அதுசமயம் மதுரை ஜில்லா சுயமரியாதை சங்ககாரியதரிசிகளான எ, எஸ்,அருணாசலம்வெடிகுண்டு ஆசிரியர் ஆனந்தம், சுயமரியாதை சங்க அங்கத்தினர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். சுயமரியாதைச் சங்கத்தினுடைய ரிக்கார்டுகளைப்பார்க்க வேண்டுமென்றும், இதற்காகவே சென்னையிலிருந்து தான் வந்திருப்பதாகவும் தோழர் பால்சிங்கு நாடார் அவர்கள் தெரிவித்தார்கள்- பின் ரிகார்டுகள் பூராவும் எடுத்துக் காட்டப்பட்டது. அவர்களுக்கு நகல்கள் எடுத்துக்கொண்டார்கள் இன்னும் பலவித விஷயங்களையும் கேட்டுக்கொண்டு அங்கத்தினர்கள் நோட்டீசுகள் வெளியீடுகள் வரவுசெலவுகணக்குகள் இவைகளையெல்லாம் பார்த்து அவைகளுக்கெல்லாம்காப்பி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்- எதற்காக இப்படி செய்கிறார்களென தெரியவில்லை-

---

ஜஸ்டிஸ்மகாநாடு

திருப்பத்தூர், தென் இந்திய நிலஉரிமைச் சங்கத்தினர்கள் நிர்வாக அங்கத்தினர்கள் கூட்டம் 17-5-34 பிராமணரல்லாதார்வாலிபசங்கக் கட்டிடத்தில் கூடிற்று வருகிற ஜூன்மாதம் இறுதியில் பிராமணரல்லாதார் மகாநாடு கூட்டுவதென்றும் அதுபோது சென்னைமந்திரிகள் மூவரையும் அழைப்பதென்றும் தீர்மானம் நிறைவேறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

எம்- நடேசம், காரியதரிசி.

புரட்சி

ஈரோடு 1934- மே மீ 20-உ

காங்கிரஸ் நிலை

அகில இந்திய தேசிய காங்கிரஸ் என்பது தோழர் காந்தியார் அவர்கள் கைப்பிள்ளையான பிறகு, தக்கதொரு விளம்பரமும், மதிப்பும் பெற்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அதனால் ஏற்பட்ட நன்மையென்ன என்று பார்ப்போமானால், ஒன்றுமில்லை என்று சொல்லுவதோடு மாத்திரம் நின்று விடுவதற்கில்லாமல், இந்திய மனித சமூகத்தின் பத்து வருஷத்திய முன்னேற்றத்தைத் தடுத்து விட்டதோடு, இந்தியா தேசத்தை இருபது வருஷ கால தூரம் பின்னால் போகும்படியும் திருப்பி விட்டதென்பது நமது அபிப்பிராயம். இது பொது விஷயங்களைப் பற்றியதாகும்.

இந்திய அரசியல் விஷயத்தைப் பற்றி கவனிப்போமானால், காங்கிரசின் இன்றைய நிலையானது 1923-24ம் வருஷத்தின் நிலையேயாகும். எப்படி என்றால் "ஒத்துழையாமை தற்காலீகமாக ஒத்தி வைக்கப் பட்டது" என்ற தீர்மானம் அப்போது செய்தவுடன் அது எந்த நிலை அடைந்ததோ அதே நிலையை அதாவது "சட்ட மறுப்பை தற்காலீகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது" என்கின்றநிலைக்கு வந்திருக்கின்றது. இதைத் தெளிவான வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், காங்கிரஸ் 10 வருஷத்திற்கு முன் எந்த இடத்திலிருந்து தவழி விட்டதோ, அந்த இடத்திற்கே இப்பொழுது (பத்து வருஷ காலம் வழி தெரியாமல் திண்டாடி விட்டு, பழையபடி தான் முதலில் தவறு செய்த இடத்திற்கே) திரும்பி வந்துசேர்ந்திருக்கிறது என்று சொல்லலாம். இன்னும் விளக்கமாக சொல்ல வேண்டுமானால் காங்கிரஸ் சரியான வழி கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடுகிறதென்பது ஒரு பக்கமிருந்தாலும், தப்பான வழியில் போய்க் கொண்டிருப்பதை நிறுத்தி சரியான வழியைக் கண்டுபிடிப்பதற்காக தியங்கிக் கொண்டிருக்கிறதென்பதாகும்.

ஆனால் 1924ல் காங்கிரசிற்கு கிடைத்த தப்பான வழிகாட்டிகளையே தான் 1934லிலும் அடைந்து விட்டதென்று சொல்லாமல் இருக்க முடியவில்லை, 1924ல் காங்கிரசின் போக்கை கெடுத்து அதுசெய்த "தியாகத்தை" பயன் படுத்திக் கொண்டு பொது வாழ்க்கையை நாணயக் குறைவாக்கி இழிவு படுத்தின மக்களாகிய சுயராஜ்யக் கட்சியார் என்பவர்களே இப்பொழுதும் அதன் "தியாகத்தை" பயன் படுத்திக் கொண்டு அதை இழிவு படுத்தி பயன் பெற அதற்கு வழிகாட்டிகளாவதற்கு (காங்கிரசை) சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நம்மைப் பொருத்த வரையில் நாம் சுயராஜ்யக் கட்சிக் கொள்கையைப் பற்றியும் அதன் தலைவர்களைப் பற்றியும், கொள்கையினுடையவும் தலைவர்களுடையவும் நாணயங்களைப் பற்றியும் முன் கொண்டுள்ள அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள யாதொரு காரணமும் ஏற்பட்டு விடவில்லை. ஆதலால் பழைய அபிப்பிராயத்தையே கொண்டு இருக்கிறோம். சுயராஜ்யக் கட்சியின் கொள்கையும் நாணயமும் எவ்வளவோ மோசமாய் இருந்தும் அதற்கு 1924-ல் சிறிது பலம் இருந்ததற்கு காரணம் தேச பந்து தாஸ் அதில் இருந்ததே யாகும். இப்பொழுது அப்படிப் பட்டவர்கள் யாரும் அதில் இல்லை ஆதலால் அக்கட்சிக்கு சிறிதாவது யோக்கியதைஏற்பட்டு விடுமோஎன்று வெரும் பயப்பட வேண்டியதில்லை. சுயராஜ்யக் கட்சியில் தேச பந்து தாசின் ஸ்தானத்தை இப்போது தோழர்சத்திய மூர்த்தி அய்யர் அவர்கள் பூர்த்தி செய்திருப்பதால் அக்கட்சியைக் கண்டு யாரும் கவலைப்பட வேண்டியதுமில்லை. ஏனெனில் தோழர் சத்திய மூர்த்தி சுயராஜ்யக் கட்சிப் பிரமுகராய் இருப்பதாலேயே அக்கட்சியானது கெடுப்பாறின்றி கெடும் பேற்றை அடைந்து விடும் என்பது உறுதி.

சுயராஜ்யக் கட்சியை வளர்த்து வாலிபம் செய்தவர்கள் தாஸ், நேரு போன்ற பெரியார்கள் என்று சொல்லப் பட்டாலும், அதைப் பெற்ற தாய் தகப்பன்மார்கள் தென்னிந்திய அய்யர் அய்யங்கார் பார்ப்பனர்களாகிய தோழர்கள் சத்திய மூர்த்திஅய்யர், ரெங்கசாமி அய்யங்கார் போன்றவர்களேயாகும். ஆனால் அந்தப் படி அவர்களை செய்து தீரும் படி செய்தது ஜஸ்டிஸ் கட்சியாகிய பார்ப்பனரல்லாதார் கட்சியேயாகும், ஆதலால் இன்றைய தினமும் தென் இந்தியாவில் ஜஸ்டிஸ் கட்சி இருப்பதால்-அதுவும் அதிகாரத்தில் இருப்பதால் இன்றைய தினமும் சுயராஜ்யக் கட்சி ஏற்படுத்த வேண்டியதுஅய்யர், அய்யங்கார்களுக்கு அவசியமேயாகும்.

சுயராஜ்யக் கட்சியின் தலைவர்களுக்கு விவரம் சொன்னது போலவே அதன் கொள்கைக்கும் ஒரு உதாரணம் சொல்ல வேண்டி இருக்கிறது. என்ன வென்றால் காங்கிரஸ் தீர்மானத்திற்கு விரோதமாய் அதன் கட்டளைகளுக்கு மாறாக சுயராஜ்யக் கட்சியார் சென்னை சட்டசபையில் அங்கம் பெற்று முட்டுக் கட்டை போடுவதற்கு பதிலாக, மந்திரிகளை அமைத்து சட்டசபை நடைபெற உதவி செய்து வந்தகுற்றத்தைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் கேள்வி கேட்ட காலத்தில் சுயராஜ்யக் கட்சியார் சொன்ன சமாதானம் என்ன வென்றால்:

"நாங்கள் அந்தப்படி செய்யாதிருந்தால் ஜஸ்டிஸ் கட்சியார் அந்த ஸ்தானத்தைப் பெற்று தேசத்தைக் கெடுத்து விடுவார்கள். ஆதலால் அப்படிச் செய்ய (மந்திரி சபையை அமைத்து உதவி செய்ய) நேரிட்டது"

என்று சொன்னார்கள். இதை யாரும் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள். இன்றைய தினமும் ஜஸ்டிஸ் கட்சி உயிருடன் (அதிகாரத்தில்) இருப்பதால் அதை ஒழிக்க காங்சிரஸ் கட்டளையையோ கொள்கைகளையோ சுயராஜ்யக் கட்சி மீறி தான் ஆகவேண்டி இருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆதலால் ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிர்ப்பாகத் தான் சுயராஜ்யக் கட்சி உண்டாக்கப் படுவதும் அதை காங்கிரசு அனுமதிப்பதுமான காரியங்கள் செய்யப் போகிறதே தவிர வேறில்லை.

இது ஒருபுறமிருக்க இதிலிருந்து வாசகர்கள் நாம் ஜஸ்டிஸ் கட்சியை முழுதும் ஆதரிப்பதாக கருதிவிட மாட்டார்கள் என்றே கருதுகிறோம். சுயராஜ்யக் கட்சி என்பது எப்படி அய்யர் அய்யங்கார்களைக் கொண்ட பார்ப்பனக் கட்சி என்றோமோ அது போலவே ஜஸ்டிஸ் கட்சியும் ஜமீன்தாரர்களையும், முதலாளிமார்களையும் கொண்ட செல்வவான்கள் கட்சி ஆய்விட்டது, என்று தைரியமாய்ச் சொல்லுவோம். ஜாதி ஆதிக்கத்தையும் ஆணவத்தையும் இல்லாமல் செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற ஒரு உண்மையான மனிதன் செல்வ ஆதிக்கத்தையும், ஆணவத்தையும், இல்லாமல் செய்ய வேண்டு மென்று நினைக்காமல் இருக்கவேமாட்டான். மனித சமூகத்துக்கு ஜாதி ஆதிக்கத்தால், ஆணவத்தால் என்ன என்ன குறையும், கொடுமையும் மானக்கேடும் இருக்கிறதோ அவ்வளவும்- சில சமயங்களில் அதற்கு மேலாகவும் செல்வ ஆதிக்கத்தாலும், செருக்காலும் மககளுக்குக் குறையும், கொடுமையும், மானக்கேடும் இருந்தேவருகிறது. ஆதலால் இவையிரண்டும் ஒழிக்கப்பட இந்த இரண்டு கட்சிகளும் அழிக்கப்பட "வேண்டியதுதான். இதை எந்த ஆதாரத்தின் மீது சொல்லுகிறோம் என்றால், அவைகளின் கொள்கைகளையும் அவைகளால் மக்களுக்கு ஏற்பட்ட பிரத்தியட்சப் பலன்களையும் அவற்றின் தலைவர்களின் யோக்கியதைகளையும், நாணயங்களையும் ஒருவாறு திருப்திகரமாய் அறிந்த பிறகே சொல்லுகின்றோமே ஒழிய வேறில்லை.

ஆனால் ஜஸ்டிஸ் கட்சியென்பது மனிதசமூகத்தில் சகல மக்களுக்கும் அரசியலைப் பொருத்தவரையிலாவது சம சுதந்திரமும், சம சந்தர்ப்பமும், சம பிரதிநிதித்துவமும் கிடைக்க முயற்சி செய்கிறோம் என்ற கொள்கையை ஒப்புக்கொண்டதால் சுயராஜ்யக்கட்சியை ஒழிக்கவேண்டிய 'அவசரத்தைப் போல் அவ்வளவு அவசரத்தில்அதை(ஜஸ்டிஸ் கட்சியை) ஒழிக்க முற்படாமல் இருந்ததோடு சில சமயங்களில் ஆதரவு அளித்து அதைப் பயன் படுத்திக்கொள்ளவும் முற்பட்டோமென்பதையும் ஒப்புக்கொ

ன்கிறோம்.

இன்று உலகில் இனி இரண்டு கட்சிகள்தான் (முடிவு காணும் வரை) ஒன்றோடொன்றுபோர்புரிந்துகொண்டு இருக்க இடமுண்டு. அதாவது ஒன்று சோம்பேறி வாழ்க்கைப் பிரியர்களாகிய மேல் ஜாதிக்காரர்கள் செல்வவான்கள்படித்தவர்கள்என்கிறவர்களைக் கொண்டதாகும். மற்றொன்று பாடுபட்டு உழைப்பவர்களாகிய தொழிலாளிகள், ஏழைமக்கள் ஆகியவர்களைக் கொண்டதாகும். இவற்றைத் தவிரமற்ற கட்சிகள் எல்லாம் சைவ சமாஜம், அன்னதான சமாஜம் போன்றதான "மோட்ச" லோகம் போக வேண்டிய பூமிபாரக் கட்சிகளேயாகும்.

காங்கிரசானது எவ்வளவு தான் தெய்வீகத் தன்மை, மதத் தன்மை ஆத்மார்த்திகம் சத்தியம் அகிம்சை என்பன போன்ற வார்த்தைகளின் மறைவில் இதுவரை வாழ்ந்து வந்ததென்றாலும் இப்பொழுது அவ்வளவு காவல்களுமொழிந்து நிராயுதபாணியாய் நின்று கவலைப்படவேண்டிய நிலைக்கு வந்துவிட்டது.

இதைப்பற்றி அதாவதுகாங்கிரசின் யோக்கியதை குறைந்து போனதைப் பற்றி நாம் ஏதும் மகிழ்ச்சியடையவில்லையென்றாலும் தெய்வீகம், ஆத்மார்த்திகம் மதம் சத்தியம் அகிம்சை என்பவைகளைத் திருகாணி பீரங்கி போன்று மனித சமூகத்திற்குக் கேட்டை விளைவிக்கும் வார்த்தைகளுக்கு யோக்கியதை போய் அவைகளை நிர்வாணமாய்ப் பார்க்கக்கூடிய நிலையை மக்களுக்கு ஏற்பட்டதைக் குறித்து மகிழ்ச்சியடையாமலிருக்க முடியவில்லை.

இனி காங்கிரசோ அல்லது வேறு எதாவது ஒரு ஸ்தாபனமோ எல்லா மனித சமூகத்தின்பேரால் இருந்து நாட்டில் வேலை செய்ய வேண்டுமானால், அது சமூகத்தில் உள்ள எல்லா மக்களையும் ஒன்றுபோல் காண்பதாயும் எல்லா மக்களுக்கும் ஒன்றுபோல் போக போக்கியம் அளிப்பதாயும் இருக்கத் தக்க கொள்கையை லட்சியமாய்க் கொண்டதாய் இருந்தால் தான் வேலை செய்ய அருகதை உடையதாகும். அப்படிக்கில்லாமல் இருப்பது பயனற்றதும் இருக்கவேண்டிய அவசியமில்லாததுவுமேயாகும், காங்கிரசில் இப்படிப்பட்ட யோக்கியதையாவது இந்த வாசனையாவது இருக்கிறதாவென்று பார்ப்பதற்குக் காங்கிரசுக்குக் குடும்பத்துடன் ஈடுபட்டு சகல வித்தியாசங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்துக் காங்கிரஸ்காரர்களால் சிறிதும் சந்தேகப்பட இடமில்லாமல் இருந்து வந்தவரும் காங்கிரஸ் காரியதரிசியுமான தோழர் ஜவஹர்லால் அவர்கள் அபிப்பிராயம் காங்கிரஸ்காரர்களால் ஆட்சேபிக்க முடியாததாகும். ஆகவே அப்படிப்பட்டவர் காங்கிரசைப்பற்றி சொன்னதென்னவென்றால் "காங்கிரசானதுஇதுவரை செல்வவான்களுக்காகவே உழைத்துவந்தது. ஏழைகளுக்காக உழைக்கவே இல்லை. காங்கிரசினால் ஏழைகளுக்கு யாதொரு பயனுமேற்படவில்லை" என்று சொல்லியிருக்கிறார்.

தோழர் சுபாஷ்சந்திரபோஸ் அவர்களும் இதுபோலவே ஏன்? இதைவிட ஒரு அடி அதிகமாகவே முன்னால்வந்து "காங்கிரசானது தொழிலாளிகளையும் ஏழை விவசாயிகளையும் வஞ்சித்துப் பொதுஜனங்களை ஏமாற்றி வந்திருக்கிறது. அதிலுள்ள தலைவர்கள் தங்கள் நன்மையையும்கௌரவத்தையும் பிரதானமாய்க் கருதினார்களேயொழியப் பொதுஜன நன்மையை லட்சியம் செய்ய வில்லை" யென்று பேசியிருக்கிறார்.

மற்றபடி, மற்ற பொதுஜனங்களில் பல அறிவாளிகளின் அபிப்பிராயத்தைப் பற்றி நாம் விவரிக்கவேண்டியதில்லை. இப்படிப்பட்ட நிலைமையிலுள்ள காங்கிரசானதுஇப்போது "பைத்தியம் தெளிந்துபோய்விட்டது. உலக்கை எடுத்துக்கொண்டுவா கோமணம் கட்டிக்கொள்ளலாம்" என்று சொல்வதுபோல் காங்கிரஸ் மேன்மையடைந்துவிட்டது- அதாவது "சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டேன். சுயராஜ்யக் கட்சியை சட்டசபைக்கு அனுப்புகிறேன்" என்று சொல்லுகிறது. இந்த நிலையிலுள்ள காங்கிரசுடன் மனித சமூக நன்மையைக் கருதுகின்றவர்கள் எப்படி ஒத்துழைக்க முடியும் என்பது ஒவ்வொருவரும் யோசிக்கத் தகுந்ததாகும்.

சமீபத்தில் பாட்னாவில் கூடிய காங்கிரஸ்காரர்கள் கூட்டத்தில் சமதர்மக் கொள்கையை சுயராஜ்யக் கட்சிக்காரர் ஒப்புக்கொள்ள முடியாதென்று தோழர் சத்தியமூர்த்தி அய்யர் சொன்னதாகத் தெரிகிறது அவர் வார்த்தைக்கு மதிப்பேதுஎன்றுசொல்லப்பட்டதும் தோழர் காந்தியாரும் சமதர்மக்கொள்கையைஆட்சேபிக்கப் போகிறார்என்ற வதந்திபலமாய் இருக்கிறதென்று சுதேசமித்திரன்பத்திரிகையில் சூசனை சாட்டப்படுகிறது- எனவே சமதர்மக் கொள்கையை காங்கிரஸ் ஒப்புக்கொள்ளவில்லையானால் மேல் ஜாதிக்காரர்களையும் செல்வவான்களையும் மத குருக்கள்களையும் மனுதர்ம சாஸ்திரங்களையும் காப்பாற்றஇனியும் எல்லோரும் சேர்ந்து காங்கிரசில் உழைக்க வேண்டுமா என்று கேட்கிறோம்- இதற்காக இனியும் ஒரு ஐம்பது வருஷத்தைப் பாழாக்கவேண்டுமா என்றும்கேட்கிறோம்.

உலகமெங்கும் நமது காங்கிரஸ் போன்ற பணக்கார ஸ்தாபனங்கள் பாழ்பட்டு ஏழைகள் விடுதலை ஸ்தாபனங்களே பலப்பட்டு வருகிற காலத்தில் நம் நாட்டில் மாத்திரம் அவற்றிற்கு முட்டுக் கட்டை போடுவது போல் காங்கிரசின்பேரால் சமதர்மத்தை வழிமறிப்பதானது வஞ்சகமும் துரோகமுமான காரியமாகும். இந்த விஷயங்களைப் பாமர மக்கள் அறிய முடியாமலிருக்கும்படி அவர்களை ஏமாற்ற "சட்டசபைக்குப்போய் வெள்ளைக்காகித அறிக்கையை தும்சம்படுத்தி விடுகிறோம்" என்று வீரம் பேசிசட்டசபைப் பக்கம் மக்கள் கவனத்தைத் திருப்பப் படுகிறது. இதுவும் வழக்கம் போல் காங்கிரசினுடைய ஒரு சரியான தந்திரமே ஆனாலும் இதனையெல்லாம் பாமர மக்கள் என்றைக்குமே ஏமாந்திருப்பார்களென்றுநினைத்திருப்பதானதுநினைக்கிறவர்களுக்கேஏமாற்றத்தைக் கொடுக்குமே யொழிய வேறில்லையென்பதோடு இந்தக் கருமத்தின் பலனை அடைந்தே தீர வேண்டிவரு மென்பதை எச்சரிக்கை செய்கிறோம்.

ஜஸ்டிஸ் கக்ஷியும் மற்றும் சில ஜாதி வகுப்பு சங்கங்களும் எலக்ஷன் வரும்போது தங்கள் மகாநாடுகளைக் கூட்டி தாங்கள் சட்டசபைக்குப் போகவும், எல்லோரும் தங்களுக்கே ஓட்டு செய்யும் தீர்மானங்கள் செய்து கொள்ளுவது போல், சுயராஜ்ய கக்ஷியும் தேர்தல்கள் வரும் போது மகாநாடுகள் கூட்டி, தாங்களே சட்டசபைக்கு போக வேண்டும் என்றும், தங்களுக்கே ஓட் செய்ய வேண்டும் என்றும் தீர்மானங்கள் செய்வது வழக்கமாகிவிட்டது. இப்படிப் பட்ட தீர்மானங்களைக் கொண்டு எலக்ஷனில் வேலை செய்யும் வாலிபவீரர்கள் அநேகர் நாக்கில் ஜலம் சொட்ட வாயைத் திறந்து கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் இதனால் எல்லாம் மனித சமூகத்துக்கு தீமையே ஒழிய நன்மையேதும் உண்டாகப் போவதில்லை என்பது உறுதி.

இப்போது நடை பெற்றுக் கொண்டிருக்கும் பாட்னா மகாநாட்டின் மற்ற முடிவுகளை தெரிந்த பின்பு, மற்ற விவரங்களைப் பற்றி நாம் இப்போது என்ன செய்ய வேண்டியதுஎன்பதைப் பற்றியும் பின்னால் எழுதுவோம்

தோழர் ஈ. வெ. ரா. விடுதலை.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் 15ந் தேதி ராஜமகேந்திரம் ஜெயிலிலிருந்து விடுதலையாகி, 16ந் தேதி சென்னை வந்து அங்கிருந்து அன்றே புறப்பட்டு 17ந் தேதி ஈரோடு வந்து சேர்ந்தார். அரக்கோணம், காட்பாடி, ஜோலார்ப்பேட்டை, சேலம் ஆகிய ஸ்டேஷன்களுக்கு ஆங்காங்குள்ள சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் வந்து சந்தித்துப் பேசிப்போனார்கள்.

ராஜமகேந்திரம் ஜெயிலில் வெயில் கொடுமையால் சிறிது கருத்தும் இளைத்தும்போயிருக்கிறார். ஆனால் உடல் சௌக்கியமாய் இருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறார். சமீபத்தில் வெயில் கொடுமைக்காக எங்காவது குளிர்ச்சியான இடத்துக்குப் போகக் கருதி இருக்கிறார்.

ஜெயிலில் தோழர் ஈ. வெ. ரா. வுக்கு தோழர் வரதராஜுலுநாயுடு அவர்கள் முயற்சியில் A- கிலாஸ் சௌகரியம் கிடைக்கப்பட்டது என்றாலும், அந்தஜெயிலிலுள்ளஸ் பிரிவுகளுக்குப் போதிய சௌகரியம் இல்லாததால் B. கிலாஸ் கைதியாகவே இருந்து வருகிறேன் என்று ஜெயில் அதிகாரி

களுக்கு சொல்லிவிட்டு பி. கிளாஸ் கைதியாகவே இருந்து வந்தார். அங்கு சாப்பாடும் ஒரு பத்திரிகையும் தவிர மற்றபடி C கிளாஸ் கைதி போலவே நடத்தப்பட்டார். சாப்பாடுகூடரொட்டி பால் என்பதைத்தவிர வேறொன்றும் இல்லை. C கிளாஸ் கைதிகளுடனேதான் வைக்கப்பட்டிருந்தார். ஒரு பிளாக்கில் உள்ள 32 அறைகளில் 28 கருப்புக்குல்லாய் கைதிகளுடன் 29 வது கைதியாகவே இருந்து வந்தார். வெராண்டா இல்லாத 7 × 10 ரூமில் காலை முதல் மாலை வரையில் வெய்யிலில் இருக்கும்படியான நிலையில் இருக்க நேர்ந்தது என்பதோடு அறையை விட்டு வெளியில் வந்தாலும் வெய்பலில் இருக்கவேண்டியதைத் தவிர வேறு மார்க்கமில்லாத ஜெயிலாய் இருந்தது என்பதோடு, பிளாக்கை விட்டு வெளியில் போவதற்கில்லாமலும் வேறு, யாருடனும் பேசுவதற்கு ..இல்லாமலும் நிர்பந்தத்தில் வைக்கப்பட்டிருந்தார். இந்தப்படி வைக்க மேல் அதிகாரிகளிடம் இருந்துஉத்திரவு வந்ததாகத் தெரிகிறது. மற்றபடி வேறுவித அசௌகரியமில்லை என்பதாகத் தெரிகிறது.

நிற்க ஈரோடு வந்த பிறகு கோவை, திருச்சி, தஞ்சை, நாகை, சேலம், திருச்செங்கோடு முதலிய இடங்களிலிருந்து சுமார் 50 தோழர்கள் வரை வந்து இருக்கிறார்கள்.

"புரட்சி" ஆபீசில் "பகுத்தறிவு"

நிற்க ஆபீஸ் நிர்வாகம் முன் போலவே நடைபெற்று வருகிறது. பகுத்தறிவு தினப்பதிப்பு நடைபெற்று வருவது அவருக்கு இஷ்டமில்லை. அதைப்பற்றி நண்பர்களுக்குள் அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது.

ஈ. வெ. ரா.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மாயவரம் தோழர் சி. நடராஜன் அவர்களுடன், திருப்பூரில் 20, 21-5-34ந் தேதிகளில் நடைபெறும்செங்குந்தர் மகாநாட்டுக்கு 20-5-34ந் தேதி காலை ஈரோட்டிலிருந்து திருப்பூருக்குப்பிரயாணமானார்.

காட்டுத்தீ—அணைகடந்த வெள்ளம்.

(மிஸ், ராதா)

தெய்வமகிமை

சிவ பெருமான் தனக்குக் குற்றேவல் புரியும் குண்டோதரனை ஒரு சமயம் குபேரனுக்குத் தாம் பூலமடித்துக் கொடுக்க உத்திரவு செய்தாராம் அப்போது குண்டோதரத் தேவன் சிவபிரானை வணங்கி "ஐயனே! தாங்கள் மும்மூர்த்திகளில் ஒருவர். தங்களுக்கு நான் அடிமையாய் வாழ்வது சரி. என்போன்ற தேவன் குபேரன் நாங்களிருவரும் சம அந்தஸ்து உடையவர்கள் அவனுக்கு கீழாக நான் தொழிலாளியாக இருப்பது நீதியா?" என்று கேட்க,சிவன் "அப்பா! என்னிலும் பெரிது செல்வம் அச் செல்வத்திற் கதிபதி குபேரன். நாமெல்லாம் பணத்திற்கு அடிமைகள் அப் பணச் சம்பத்திற்கு சர்வாதிகாரியாய் விளங்கும் குபேரனுக்கு நாம் தொழிலாளியாய் நின்று உழைப்பதே நீதியாகும் என்று திருவாய் மலர்ந்தருளினாராம். இப் புராணக்கதை சில காலத்திற்கு முன் நான் தோழர் கைவல்யத்திடமிருந்து கேட்ட கதைகளிலொன்று உலகத்தை படைத்துக்காக்கும் தெய்வ மூர்த்திகளுக்கு பணத்திற்கு அடிமையாகி எதேச்சாதிகாரத்தை அமுலுக்குக் கொண்டுவரும் புத்தியும் மகிமையும் இருக்குமானல் அவைகளை நம்பிவணங்கி வாழும் ஏழைகள் என்று தங்கள் தலையில் மலைபோல செழித்து நிற்கும் பணக்காரத்திமிரை உதறித்தள்ளி விடுதலைபெற்று உலகை அண்ணார்ந்து பார்ப்பது பணக்காரத்தன்மைக்கு அடிமையாகி செல்வ ஆடம்பரத்தில் மயங்கி பிரபுக்களுக்கே காட்சிகொடுத்து முக்தி கொடுப்பதாக உறுதிகூறும் நம் தெய்வங்கள் இதுவரை ஏழையை கடைக்கண்ணால் கூட பார்க்கவில்லை. மேற்படி தெய்வங்களை நம்பி வாழும் ஏழைதொழிலாளியும் "பூசாரியை நம்பின ஆடு"போல பலியாகிக்கொண்டுவருவதும் நம் கண்களுக்கு அனுதினமும் படுகிறது. தெய்வமகிமை என்று, நாட்டைவிட்டு பூண்டோடு அழிகிறதோ அன்றல்லவா ஏழையின் கால்விலங்குகள் அறுபட்டுவிழும்!

தர்மசிந்தை

தான் ஆடாமல்அசையாமல் இருந்த இடத்தை விட்டு இம்மியளவு பெயராமல் செல்வத்தை அமோகமாகப் பெருக்கிக் கொண்டே வாழும் செல்வக்கூட்டத்தில் யாரோ ஒரு கனவான் தான் சாப்பிட்ட எச்சிலையில் சிறிது அன்னத்தைவைத்து விட்டு எழுந்துபோனல் அக் கனவான் காருண்ய மூர்த்தியாகக் கொண்டாடப்பட்ட காலமொன்றிருந்தது. கோடிக்கணக்கில் நிறைந்து நின்று தனக்கு ஒருவருக்கே சொந்தமான செல்வத்தில் செம்புக்காசொன்றை வீசி எறியும் பிரபுவே தாமே சிந்தைவான் என "விளம்பரப்படுத்திய காலமும் உண்டு. ஆனல் இப்போதோ! செல்வம்நிறைந்தது எங்களால். கோடிக்கணக்காக குவிந்தது எங்கள் உழைப்பால், எங்கள் நெற்றிவேர்வைத் தீர்த்தமே மலைபோல குவிந்து உங்களுக்கு சொந்தமென கிடக்கும் தானியத்திற்குப்பாய்ந்தது. தர்மசிந்தை தங்களைத் தாண்டி, தாங்கள் மனமிளகி எச்சிலையில் அன்னம் பரிமாரியது போதும். உலகத்தில் நாங்களும் அங்கத்தினர்கள். பூலோக சுகத்தில்எங்களுக்கும் பங்கு வீதாசார முண்டு. எல்லோரும் உழைப்போம். சமமாக விளைந்ததை அனுபவிக்கலாம். "பல லக்ஷம் கைகள் வேலை செய்து களைத்துப்போக அதன் பலனல், ஒருவாய் சிரமமின்றி அனுபவித்து ஏமாற்றியது இனிப்பழைய கதையாகப் போகட்டும்" என்று ஏழைத் தொழிலாளிகள் ஓயாமல் உலகமெங்கும்கதறுவதுசெல்வவான்கள் காதுகளில் ஊடுருவிப்பாய்கிறது. ஏழைக்கிரங்கி தர்மசிந்தை காட்டும் நாடகத்தில் திரை விட்டாயிற்று. தொழிலாளிகள் சங்கத்தில் "தோழமை ஸ்தானம்" அநேகம் காலியாகக் கிடக்கின்றன, பிரபு தமது ஏழடுக்கு மாளிகையைவிட்டுக்கிழிறங்கிதொழிலாளியின் தோழமை ஸ்தானத்திற்கு அங்கத்தினராகித் தொழிலாளியின் வேலைக் கருவிகளை தானும் கைக்கொண்டு சூரியவெப்பத்தில் நிற்பதைத் தவிர வேறு வழியில்லை. தர்மசிந்தை,ஏழைக்கிரங்குதல், முதலிய நாடகங்களை மறுபடியும் முதலாளிகள்நடிக்கஆரம்பித்து தன் தண்டவாளப்பெட்டியினிடம் அன்னத்திற்கு அலரும் கோடிக்கணக்கான மனித சின்னங்கள் வராமல் பாதுகாக்கலாமென்பது பகல் கனு. இதுவரை தொழிலாளியின் மேல், போர்த்திருந்த பூர்வ ஜன்மவினை என்னும் பொய்க் கம்பளம் புகைந்துபோய் விட்டது ஏழையும் கண்விழித்தாயிற்று. படித்த கூட்டம் முதலாளியோடு சேர்ந்து ஏழை கண்களை மூடச் செய்துவேதாந்த போர்வையை பழைமையின் மூடிவிடலாமென்பது இயலாதகாரியம்.

குதிரைக்குக் கொம்புகளுண்டு

உலகில் காணும் எல்லாமனிதர்களுக்கும் சராசரி பகுத்தறிவு உண்டு. ஏழையின் வாழ்க்கை நிலையையும் தன் சுயபலத்தால் வளர்ந்து நிற்கும் உன்னத நிலையையும் எந்த முதலாளிக்கும் எளிதில் படும் ஆனல் முதலாளி நின்று யோசித்து முடிவு கட்ட வழியின்றி தொழிலாளிக்கும் ஏழைக்கும் இடையே ஒருவரை ஒருவர் ஊடுருவிப்பாய்ந்து அறிய முடியாதபடி பெரிய சுவராய் நிற்கும் கூட்டம் படித்த கூட்டம் என்பது வெளிப்படை. ஏழையினிடம் உனது கஷ்டம் கடவுளுடைய சிருஷ்டி விநோதம் பண்ணையார் அனுபவிக்கும் காலங்கள் பூர்வ ஜன்மபுண்ணியம் அவரவர்கள் அந்தந்த ஸ்தானத்திலேயே நிலைத்து நின்று படிகடவாமல் இருப்பதே உலகதர்மம்பணக்காரன் புண்ணியபுருஷன் அவனுக்குப்பணி செய்வதே ஏனையமனிதஉயிரின் பொருப்பு!! என்று அவனுக்குபதேசமும்; பணக்காரனிடம் நீங்களே புத்திமான உலகத்தை ஆண்டு அனுபவிக்க பிறந்தவர்கள் முதலாளிகள் மற்றவர்கள் அவர்கள் வகுத்த வாய்க்காலில் போவதே நீதி முதலாளிகள் குதிரைக்குக் கொம்புகள் உண்டு என்றால் "உண்டு" என்று ஏகோபித்து ஏனையோர் பாட வேண்டி

யது கடமை என்று அவர்களிடம் புகழ் அந்தாதியும் பாடி உலசம் ஒரு அடிமுன்னேறவழியின்றி செய்து வருகிறார்கள் முதலாளிகள் தங்கள், எதிரே மனிதர் உட்கார்ந்து இருப்பதைக்கண்டிக்க முடியாதபடி வாழ அவர்கள் பின் இருந்து பல்லவி பாடும் படிப்பாளிகள் செய்து வருகிறார்கள் இதனால் ஏழைகளையே மாற்றி அவர்களைபடித்த கூட்டம் அடிமை யாக்கிக் கொள்வதோடு அதே காலத்தில் பணக்காரத் தன்மையையும் தன் ஆதிக்கம்விட்டு விலகாதபடி வைத்துக்கொள்கிறது. முதலாளியிடம் தொழிலாளிபழகும் முறையை படித்த கூட்டம் வகுத்துவிடவே பணக்காரனைக் கண்டவிடத்து ஏழைமெய் விதிர்த்து பேச நாவின்றி இடையில் வஸ்திரத்தை இருகக்கட்டி கைகூப்பி வாய்பொத்தி நிற்கிறான் இந்நிலையில் ஏழை, வீரத்தோடு தன்குறையைக் கூறுவதெங்கே? முதலாளி!! வெள்ளைக்காக்கைகண்டேன்!! என்றால்!! ஆம் அதை நாங்களும் தரிசித்து அதிசயித்தோம் என்று எல்லோரும் ஒருங்கே முறைவைத்துப் பாடி அதை அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்கிறார்கள் இது மாதிரி உலகம் இன்னும் சுழன்று வருகிறது கஷ்டம் சகிக்க முடியாவரப்புக்கு வரும் போது விமோசன காலம் தானே வருவது அதிசய மில்லை.

புதுவெள்ளம்

கொழுந்து விட்டு எறியும் தீயின்வெப்பம் பலகாலமாக கருக்கு வருகிறது புதிய வெள்ளம் குபீரெ பொங்கும் காலம் வெகுசமீபம். வெள்ளம் வருமுன் தீ ஓரளவுக்கு அணையுமானால் எரியும் கருப்புபாதிக்காது. அதுபோல ஒரு பக்கம் முதலாளித்தன்மையான அக்கினிஜிவாலை கொழுந்துவிட்டு எறிகிறது அதன் வெப்பம் தாங்க முடியாது வெறொரு பக்கம் தொழிலாளியின் கண்ணீர் வெள்ளம் பொங்குகிறது. ஒரு காலத்தில் தீயணையும் என்பது உறுதி. அது வெள்ளம் வந்த பின் தானா? என்பது சந்தேகநிலையில் இருக்கிறது.

கோலாலம்பூர்.

இராமநாதபுரம் ஜில்லா பொதுமன சபைக் கூட்டம் 18.3-34க் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு கோலாலம்பூர் 10 பெரியார் வில்லாவில் 11 தோழர்கே. யு. வேலுசாமி அவர்கள் தலைமையில் நடந்தது கூட்டத்திற்கு சிலங்கூர், செந்துல் முதலிய விடங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள் தலைவர் முகவுரையாக, ஆண் பெண் சம அந்தஸ்துடன் வாழ்க்கை நடத்த வேண்டுமென்றும் பல பாகங்களில் சிறப்பாக இராமநாதபுரம் ஜில்லா போன்ற விடங்கள் ஆதித்திராவிடர்கள் கொடுமையாக நடத்தப்படுவதை கண்டித்து தக்கது செய்ய அரசாங்கத்தார் முன்வரவேண்டுமென்றும் கூறினார். பலதோழர்கள் ஆதிதிராவிடர்கள்கொடுமையாக நடத்தப்படுவதைக் கண்டித்துப் பேசினார்கள். பிறகு கோலாலம்பூர், இராமனதபுரம் ஜில்லா பொது ஜனசபைக்குகீழ்கண்டதோழர்கள் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டபின் கூட்டம் இரவு 8மணிக்கு முடிந்தது.

தலைவர் தோழர் கே. வி. வேலுசாமி. உபதலைவர்கள் கே. அழகப்பா, கா. ராஜகோபால். கௌரவ காரியதரிசி சி எஸ் குமரசாமி. உபகாரியதரிசி பி. எம். முத்தையா. கௌரவ பொக்கிஷதார் எம். கே. பழனி. உப பொக்கிஷதார எஸ். எம். சுப்பையா.

நோயாளிகளுக்கோர் எச்சரிக்கை.

நல்லகாலம் வந்துவிட்டது.
இது சமயத்தை இழந்து விடாதீர்கள்.
ஆயிரக்கணக்கான நோய்கள் குணமாகிவிட்டது.

நீரழிவு, பவுந்திரம், வெள்ளை, வெட்டை முதலிய நோயுடையவர்கள் நேரில் வந்து குணப்படுத்திக்கொள்ளுங்கள். பத்து நாட்களில் குணமடைவீர்கள். நீரழிவு, பவுந்திரம் முதலிய நோயுடையவர்களின் விலாசத்தைத் தெரிவிப்பவர்களுக்கு ஒரு ரூபாய் இனம் அனுப்பப்படும். விபரங்களுக்கு யெழுதித் தெரிந்து கொள்ளுங்கள்.

வேண்டிய சர்டிபிகேட்டுகளை
நேரில் தெரிந்துகொள்ளுங்கள்.
அரண்மனை வைத்தியர்
எஸ். டி. மாணிக்கம் பிள்ளை,
சித்தவைத்தியசாலை, வளையல்காரத்தெருவு
ஈரோடு.

'ஹரிஜன்' என்றபதத்திற்கு ஆட்சேபம்.

கல்கத்தா மே 15—

இங்கிருந்து 19மைல் தூரத்திலுள்ள டிடாகர் என்னுமிடத்தில் தாழ்ந்த வகுப்பினரின் கூட்டமொன்று நடந்தது. அப்போது 'ஹரிஜன்' என்றவார்த்தையை ஆட்சேபித்தும் அது வசைமொழி போலிருப்பதால் அதை இனி உபயோகிக்கக் கூடாதென்று என்று வற்புறுத்தியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆலயப்பிரவேச இயககத்தில் தாழ்ந்த வகுப்பினருக்கு யாதொரு சிரத்தையும் கிடையாதென்றும் தங்களைக் கொண்டு இன்னும் அதிகமான நன்மையவே ராஜீயவாதிகள் சூள்ச்சிககள் செய்வதாகவும் மற்றொரு தீர்மனாம் நிறைவேறியது.

சமூக பொருளாதார முன்னேற்றம்.

திவான் பகதூர் பிரசங்கம்.

சென்னை, இந்திய யுவர்கள் சங்கத்தின் ஆதரவில் 15-5-34 மாலை "சமூக" பொருளாதார முன்னேற்றம், என்பதைப்பற்றி திவான் பகதூர் எ. ராமசாமி முதலியார் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் வருமாறு:—

சென்ற நூற்றாண்டின் மத்தியிலிருந்து எல்லாம் மாறிவிட்டது. மகாயுத்தம் பல வித்தியாசங்களைப் பல தேசங்களில் ஒழித்துவிட்டது. ருஷ்யாவை எடுத்துக் கொண்டால் உயர்ந்தவர்கள் என்று கூறப்பட்டவர்கள் தாழ்ந்தவர்களாகிவிட்டனர். தாழ்ந்தவர்கள் என்பார் முற்போக்கடைந்து விட்டனர். வரவரத் தாழ்ந்தவர்கள் என்பவர்களுக்கும் தேச பரிபாலனத்தில் ஒரு பங்குண்டு என்பது நிரூபணமாகிறது.

தனக்கும் தெசபரிபாலனத்தில் பங்குண் என்றும் இனிமேல் தன்னை ஒதுக்கி வைக்க முடியாதென்றும் தானும் முன்னுக்கு வர அதிகாரமிருக்கிறதென்றும், இப்பொழுது ஒவ்வொரு தொழிலாளியும் நினைக்கிறான், தன்னைமறந்து ஒவ்வொரு சமயங்களில் மேல் வகுப்பார் என்று கூறப்படுபவர்களுக்கு மரியாதை செலுத்தியபொழுதிலும் தன் சுதந்திரத்தைத் தொழிலாளி மறக்கவில்லை.

பொருளாதாரப் பிரச்சனைகள் ஒவ்வொரு தேசத்திற்கும் முக்கியமானதாக இருக்கிறது.

நம் தேசத்தில் பசியென்ற சொல் அதிகமாக நம் காதில் படவில்லையானால் அதன் உண்மைத் திறனை நாம் அறிந்து கொள்ள வில்லை என்று தான் கூறவேண்டும். விவசாயிகளின்பளுவை ஒழிப்பதற்காகக் கூட்டப்பட்ட மகாநாடு முறிந்து விட்டால் அதனி காணம் அந்தப் பிரச்னை அவசரமானதுப் முக்கியமானது மல்ல வென்பதைக் காட்டுவதல்ல. அது கவர்ன்மெண்டின் போக்கையே குறிக்கிறது.

மத்திய வகுப்பினர் படித்தவர்கவ் ஆகியவர்கள் வேலையில்லாக் கஷ்டம் மென்மேலும் முற்றி வருகிறது. இவற்றையெல்லாம் மாணவர்கள் கலந்தாலோசிக்க வேண்டும்.

தலைவரின் முடிவுரைக்குப் பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

இருதோழர்கள் வரவு

சுயமரியாதை தோழர்கள் டி. பி. துரைசாமி அவர்களும் எஸ்- கே- ராஜகோபாலன் அவர்களும் மலாய்நாட்டிலிருந்து 17-5-34 ல் நாகையில் இறங்கி தேவூர் வந்து சேர்ந்தார்கள்.

8-ம் பக்கத் தொடர்ச்சி

ருப்பவர்களாலும் அழைக்கப்படுவதோடு கூட, ஜெயில் அதிகாரிகள் பயந்து நடக்கும்படியான நிலைமையிலேயும் இருக்கிறது. என்னைப் பொருத்தவரையில், நான் பி. வகுப்பில் இருந்தாலும், எனக்கு வெண்ணையும் பாலும் பழமும், சில சமயங்களில் மாமிசமும் கிடைத்து வந்தது. அதுபோல் இங்கு எனக்கு வீட்டில்கூட திரேக நிலைமைக்கு ஏற்ற சாப்பாடு கிடைக்க மாட்டாது. வெய்யிலின் கொடுமைதான் தாங்க முடியவில்லை. ராஜமகேந்திர ஜெயில் எவ்வளவு கேவலமான நிர்வாகமுடையதாய் இருந்தாலும், கஷ்டமான ஜெயில்

அல்ல- Habitual Prisoners என்னும் கருப்புக்குல்லாய்க்கார திருடர்கள் ஜெயிலாய் இருந்தபோதிலும், கைதிகள் எவ்வித கேள்வி கேட்பாடு இல்லாமல், இஷ்டப்படி உள்ளே திரியலாம் கைதிகளுக்கு வேலையும் கிடையாது. அங்கும் கஞ்சாகுடியும், பீடி சிகரெட்டுகுடிப்பதும், வெத்திலைபாக்கு புகையிலை போட்டு ஆனந்தப்படுவதும் சர்வசாதாரணம். ஜெயிலுக்குள்ளேயே கைதிகள் கஞ்சா செடிவளர்க்கிறார்கள். அந்த செடியில் ஏதாவது சில பூக்களை சொருகிவைத்து பூச்செடி மாதிரி செய்து விடுகிறார்கள். அதை ஜெயில் சூப்ரண்டு கவனிப்பதில்லை. மற்ற சில்லரை அதிகாரிகள் வழக்கம்போல் அதனால் லாபமடைகின்றார்கள். நான் பலஜெயிலில் பார்த்திருந்தாலும், ராஜமகேந்திரபுரம் ஜெயில்போல் பொருப்பற்றதும், அதிக குற்றங்கள் நடப்பதுமான ஜெயில் பார்த்ததில்லை. சூப்ரண்டு நல்லவர் என்று சொல்லலாம். ஆனால் நிர்வாகத் திறமை போராது. சிப்பந்திகளுக்கு பணமே பிரதானம். அவர்கள் அடிக்கடி கைதிகளால் அவமானப்படுவதை லக்ஷியம் செய்வதில்லை. அங்குள்ள டாக்டர்களும் அப்படியே. இவற்றைப் பற்றி மற்றொரு சமயம் பேசுகிறேன்.

எனக்கு கோவைசிறையிருக்கும் போது காலில் வீக்கம் இருந்தது- அந்த வீக்கம் ராஜமகேந்திர ஜெயிலுக்குபோன பிறகு தானாக வடிந்துபோய் விட்டது.

நிற்க சட்டமறுப்பு இயக்கத்தைப்பற்றி சிலர் பேசினார்கள். அவ்வியக்கம் சர்க்கார் அடக்குமுறையினாலேயே நின்றுவிடவில்லை. அந்தக் கொள்கையானது மக்களால் அலக்ஷியப்படுத்தப்பட்டு வெறுத்துத் தள்ளப்பட்டு விட்டகால் அது நிறுத்தப்பட வேண்டியதாயிற்று, ஒன்றுக்கு முதவாத கொள்கையை கட்டிக்கொண்டு மாரடிப்பது பைத்தியக்காரத்தனமென்று பொது மக்கள் உணர்ந்துவிட்டார்கள். சட்டமறுப்புகட்சியே, பொஸ்ஸென்று போய்விடுமென்றும், அது மக்களுக்கு கஷ்டத்தையை விளைவிக்கும் என்றும், மக்களுக்கு 10 வருஷ காலமாக எச்சரிக்கை செய்து வந்தவர்களில் நானும் ஒருவன். அதன் பயனாய் தேசபக்தர்கள், தேசீயவாதிகள் என்பவர்களால் நான் பலமாய்த் தாக்கப்பட்டேன் என்றாலும், முடிவில் சட்ட மறுப்பு பயனற்றதாகவும் பைத்தியக்காரத்தனமாகவுமே முடிந்தது.

நான் ஜெயிலுக்குப்போய் கொஞ்ச வருஷங்களாகி விட்டது. இதற்குமுன் ராஜத்துவேஷ கேசில் அரஸ்ட்செய்யப்பட்டு இருந்தாலும், சர்க்காரே அவைகளை வாபீஸ் வாங்கிக் கொண்டார்கள். பிறகு சமீபத்தில் திருச்சியில் கத்தோலிக்க கிருஸ்தவ திருமணத்தின் போது போலீசாரால் அரஸ்ட் செய்யப்பட்டும், முடிவில் வழக்கே தொடராமல் போய்விட்டது.

மற்றபடி நான் இப்போது வெளியில் வந்ததில் இந்த இரண்டு நாளிலேயே, ஏன் வந்தோம் என்றே தோன்றுகிறது. இப்பொழுது என்ன செய்வதென்றே புரியவில்லை. மற்றும் சிவில் விவகாரத்துக்காக அரஸ்ட் செய்யப்பட்டேன். ஆனால் காயலா நிமித்தம் இரண்டு மாதத்திற்குள்ளாகவே விடுதலை செய்யப்பட்டேன் என்றாலும், இவைகள் எல்லாம் "தேசபக்தன்" என்ற பெயர் அடையமுடியவில்லை ஆனால் இப்பொழுது சர்க்கார் அந்தக் குறையை நிவர்த்தி செய்து விட்டார்கள். இதன் பயனால் அறியாமை மிகுந்த பாமர ஜனங்களால் நான் பாராட்டப்படக்கூடும்- மற்றபடி அறிவாளிகள் நான் ஜெயில் சென்றதைப் பாராட்ட யாதொரு விஷயமுமில்லை. இதில் எந்த வித்தியாசமும் அடங்கியிருக்கிறதாக சொல்வதற்கும் இடமில்லை. எப்படி இருந்தபோதிலும் அரசியலைப்பற்றி நான்கொண்ட அபிப்பிராயம் இன்று இந்தியா முழுதும்பரவி விட்டது. அது மாத்திரமல்ல. உலக மெங்கும் சட்டமிருக்கிறது நாடு- இந்தியாவை எடுத்துக்கொண்டால் நமது அபிப்பிராயங்களைக் கொண்ட கக்ஷிகள் மத்திய மாகாணத்திலும் ஐக்கிய மாகாணத்திலும் பம்பாயிலும், பஞ்சாபிலும், கல்கத்தாவிலும் இருந்து வருகிறது- நாம் 'முன்னதாக தெரிவித்தது பிசகு' என்று மட்டும் சொல்லலாம் அந்த 'தப்பு' நம்மீது இருந்தாலும் இப்பொழுதுள்ள வாலிப இந்தியா அங்கீகரிக்க முன் வந்ததைப் பார்த்துநாம் பூரிப்படையாமல் இருக்க முடியவில்லை. நமது மாகாணத்தைப் பொருத்தவரை காங்கிரஸ்காரர்களும் நாமும் எப்படியாவது ஒன்று சேர்ந்து வேலை செய்ய வேண்டுமென்று யோசனைகூறப்பட்டது காங்கிரஸ் அதற்குத்தன்னை தகுதி உடையதாக்கிக்கொண்டால் நான்தயாராயிருக்கிறேன்.

நிற்க, சுயராஜ்பக் கக்ஷியின் யோக்கியதையைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால், நமது பழைய குடி அரசைப் புரட்டிப்பார்த்தால் தெரியவரும்- சுயராஜ்யக் கக்ஷியின் யோக்கியதையை அறிய ஆசையுள்ளவர்கள் ஒரே ஒரு விஷயத்தைக் கொண்டு தெரிந்துகொள்ளலாம்-அதாவது அதன் தலைவர்கள் பிரமுகர்கள் ஆகியவர்கள் யார் என்று பயர்த்தாலே போதும்! தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களே (!) அதன் முக்கிய தலைவராய் விளங்குகிறார் மற்றபடி நான் அதைபற்றி அதிகம் சொல்லவேண்டுவதில்லை. (தொடரும்)

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரனோடு வந்தேன். அப்பொழுது என்கையில் ஆயிரக்கணக்கான ரூபாய்களிருந்தன. அப்பணத்தினால் சுமார் ஐம்பது ஏக்கர் நிலம் வாங்கி நானும் என் சகோதரனும் விவசாயம் செய்ய ஆரம்பித்தோம். அவ்வாறு நாங்களிருவரும் பாடுபட்டதின் பலனாகநெல் சுமார் 500 மூட்டைகள் வரை அயலூர்களுக்கு ஏற்றுமதி செய்தோம் ஆனால், இப்பொழுதோ, என்கையிலிருந்த எல்லாப் பணமும் செலவாகி விட்டதோடு ஒரு ஜதை வேஷ்டிவாங்குவதற்குகூடபோதுமானபணம் என்கையில் தற்காலமில்லை" என்பதாக இப்பொழுது உரைக்கின்றான்.

பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் மதிப்பிடப்படக்கூடிய ஓர் பூமியானது கடந்த மூன்று வருடங்களுக்குள் அந்த பூமியின் சொந்தக்காரர்களுக்கு யாதொருவித உபயோகமுமில்லாமலே போய்விட்டது. எவ்வாறெனில் அப்பூமியின் உண்மையான சொந்தக்காரன் அப்பூமியை அடமானமாகவைத்து பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை கடன்வாங்கியிருந்தான்- விளைபொருள்களின் விலையானது குறைந்துபோய் விட்டபடியால் அவனால் அக்கடனைத் தீர்க்க முடியவில்லை- வட்டியும் அடைபடவில்லை- ஆகையால் நாளாவட்டத்தில் அவன் தன்னுடைய பூமியை இழந்து விட்டான்- அந்த பூமியை வாங்கியவன் அந்த நிலத்தை சிறு சிறு பாகங்களாக பங்கிட்டு, சாகுபடி செய்வதற்காக பல்வேறு குடியானவர்களிடம் வாரத்திற்கு ஒப்படைத்தான். அவ்வாறு வாரத்திற்கு வாங்கியவர்களிடம் சாகுபடி செய்வதற்குப்போதுமானபொருளும், மாடுகளும், விதைகளும், எருவுமில்லாததினால் அவர்கள் யாவரும் நிலச் சொந்தக்காரனிடமே கடனாகசிறிது தொகை வாங்கி தங்கள் தங்களுடைய பங்கு பூமியில் சாகுபடி செய்தார்கள்- அவர்களுடைய பங்கு பூமியில் விளைந்த விளைச்சலை அறுவடை செய்து அவர்களுடைய செலவு அழிவுநீக்கிமீதியைகணக்குப்பார்த்ததில் பயிரிட்டவர்களுக்கு இதனால் யாதொருவித பிரயோஜனமுமில்லாமல் போனதுடன் பூமியின் சொந்தக்காரனிடம் வாங்கியபணத்திற்கு வட்டித்தொகை செலுத்துவதற்கோ அல்லது உழுது பயிர் செய்ததற்காக நிலச்சொந்தக் காரனுக்கு வாரத்தொகை செலுத்துவதற்குப்போதிய பணமோ இல்லாமல் போய்விட்டது.

ஓர் வயலிலிருந்து அறுவடையான விளைபொருள் சந்தைகளுக்கு கொண்டு வரப்பட்டு தேவையுள்ள மக்களுக்கு விற்கப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுதோ விளைவிப்பவனுக்கும் விலைக்கு வாங்குபவனுக்கும் இடையில் ஓர் மனிதன் தரகனாகத்தோன்றிமார்கட்டுகளின் நிலவரத்தை ஆண்டுகொண்டுவருகின்றான். தரகு மண்டிகளில் விற்பனையாகாத விளைபொருள்கள் யாவையும்குடியானவனே, அவனுடைய செலவிலேயே, மீண்டும் எடுத்துக்கொண்டு செல்லவேண்டும்-அல்லது தரகனால்கொடுக்கப்படும் குறைந்த தொகைக்கே அவைகளை விற்றுவிடவேண்டும்.

1933ல் நெல் விளைவானது அபரிமிதமாக யிருந்தது- தஞ்சை ஜில்லாவிலுள்ள எல்லா ரயில்வே ஸ்டேஷன்களிலும்எண்ணற்ற நெல்மூட்டைகள் ஏற்றுமதிக்காக காத்துக் கொண்டிருந்தது- தஞ்சை ஜில்லாவிலிருந்து ஈரோட்டுக்கு எண்ணற்ற ஸ்பெஷல் வண்டிகளில் நெல் மூட்டைகள் ஏற்றப்பட்டு கொண்டு வரப்பட்டன. ஈரோடு ரயில்வேஸ்டேஷனில் இறக்குமதி செய்யப்படுமிடத்தில் பல்லாயிரக்கணக்கான நெல்மூட்டைகள் குவியல் குவியலாக நாலுபக்கத்திலும் சிதறுண்டு கிடந்தன. வியாபாரிகளோ கட்டுப்பாடாக நெல்விலையையே குறைத்துவிட்டார்கள். குடியானவனோ அதனால் அபரிமிதமான நஷ்டத்தையே யடைந்தான்.

(தொடரும்)

ரோஜா முத்தையா

சுயமரியாதைத் திட்டமே சமதர்மத் திட்டம்.

இந்தியாவிற்கு உண்மையான தேவை.

நிலமும், விவசாயமும், யந்திரசாலைகளும் பொதுஜன ஆதிக்கத்திற்குள் ஆகவேண்டும்.

அஞ்சுமனே இஸ்லாமிய மண்டபத்தில் இன்று காலை காங்கிரஸ் அபேதவாதிகளின் முதலாவது மகாநாடு கூடியது. 130 பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவர்களின் விவரம் வருமாறு. பீஹார் 41 வங்காளம் 18 ஐக்கிய மாகாணம் 30, பம்பாய் 7, சென்னை 3, பஞ்சாப் 3, ராஜ புதனம் 3

நடவடிக்கைகளைக் கவனிக்க 200பேர் வந்திருந்தனர். அவர்களுள் ஸ்ரீமான்கள் புருஷோத்தமதாஸ் தாண்டன், கோவிந்த மாளவியா கோவிந்த வல்லபபந்து, பி. திரிகம் தாஸ், உமாநேரு சாமாகுமாரி நேரு, லக்ஷ்மணபுரி டாக்டர் ஸ்டால் முதலியவர்கள் முக்கியமானவர்கள்,

பிரதிநிதிகளுள் பின் கண்டவர்கள் முக்கியமானவர்கள்: தோமான்கள் ராமகிருஷ்ண வேணிவுரி [முஸபர்) கஜேல்கர் (மகாராஷ்டிரம்) புரொபஸர் ஜகமக்மல் (ஸிந்து] ஸ்ரீபாத சங்கர், ஸ்ரீமதி சகுந்தலாதேவி (சென்னை) பாய் கொத்தவால் (ஆஜ்மீர்) லாலா கிருஷ்ண சர்மா, கிருஷ்ணா காந்த மாளவ்யா, ஹரிமோகன சாட்டர்ஜீ, சர்தார் சார்துல்சிங் (பஞ்சாப) மிஸஸ் பூர்ணிமாபானர்ஜி (அலகாபாத்) ஜெனரல் அவாரி ஸ்ரீமதி வித்தியாவதி தேவி (மத்திய மாகாணம்) மஸானி(பம்பாய்) சுவாமி ராமானந்தர் (பருக்காபாத்)

மகா நாட்டில் விசேஷ விவாதத்திற்குப் பிறகு சட்டசபை பிரவேசத்தைப் பற்றி அடியிற்கண்ட தீர்மானம் மிகப் பெரும் மான்மையான ஓட்டுகளால் நிறைவேறியது:—

1-வது தீர்மானம்
சட்டசபைப் பிரவேசம்

லாகூர் காங்கிரஸில் நிறைவேறிய சட்டசபை பஹிஷ்காரத் தீர்மானத்தை மற்றொரு காங்கிரஸ் மகாசபை கூட்டி ரத்து செய்யக் கூடாது. அடுத்த காங்கிரஸில் லாகூர் தீர்மானம் ரத்து செய்யப்படும் பட்சத்தில் தேர்தல் சம்பந்தமான காரியங்களும், சட்டசபைக்குள் புகுந்தபின் அங்கு செய்ய வேண்டிய வேலை முறையும், காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பொறுப்பிலேயே இருந்து வர வேண்டும். சட்டசபையில் செய்யும் வேலைகள் அபேதவாதக் கட்சித் திட்டத்தை யனுசரித்ததாகவும் இருக்கவேண்டும் என்று இம் மகாநாடு அபிப்பிராயப் படுகிறது.

அந்த ஆக்ஞையின் 2.வது பகுதி பின்வருமாறு:—

"கராச்சி காங்கிரஸில் ஜீவாதார்மான உரிமைகளைப் பற்றி நிறைவேறிய தீர்மானத்தின்படி ராஜீய ஸ்வாதீன மென்றால் பசிப்பிணியால் அவஸ்தைப்படும் லட்சக்கணக்கான ஜனங்களின் பொருளாதார சுதந்திரமும் அதில் சேர்ந்ததாகும்; சுதந்திரப் போராட்டத்தின் அஸ்திவாரத்தை இன்னும் விரிவு படுத்த வேண்டும்.

சுயராஜ்யம் வந்தால் கூட ஜனங்கள் பொருளாதாரத் துறையில் அவதிப்படாமல் இருக்க வேண்டியும், நோக்கம் காரியம இரண்டிலும் அபேதவாதத் தன்மையுடைய ஒரு திட்டத்தைக் காங்கிரஸ் நிர்ணயிக்க வேண்டும்.

அபேதவாத ராஜாங்கமே காங்கிரஸின் லட்சியமென்று வரையறுக்கும்படி காங்கிரஸுக்கு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி சிபார்சு செய்ய வேண்டும்.

அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, விடுதலைப் போராட்டத்திற்கு எதிரிடையாயிருந்தவர்கள் தவிர மற்றெல்லாருக்கும் ஓட்டுக் கொடுத்து அவர்களைக் கொண்டு ஜனப்பிரதிநிதி சபையொன்று அமைத்து அடியிற் கண்ட கொள்கைகளை ஆதாரமாகக் கொண்ட ஓர் அரசியல்அமைப்பைத் தயாரிக்கச் செய்ய வேண்டும்.

(1) பண்டங்களை உற்பத்திச் செய்யும் ஜனங்களுக்கு எல்லா அதிகாரமும் மாரவேண்டும்.

2. ராஜாங்கத்தாரே தேசத்திற்கவசியமான சுபிட்சத் திட்டமொன்று நிர்ணயிக்க வேண்டும்

3. இரும்பு, பருத்தி, சணல் ரயில்வே, கப்பல், சுரங்கம், பாங்கிகள் முதலிய யாவற்றையும் ஜன சமூக நன்மைக்குற்ற வழியில் ராஜாங்க மயமாக்கி விடவேண்டும்.

4. அன்னிய நாட்டு வியாபாரத்தில் கவர்ன்மெண்டுக்கு ஏக போக பாத்தியம்.

5. உற்பத்தி விநியோகம் யாவும் கூட்டுறவு முறையில் இருக்கவேண்டும்.

6. மன்னர்கள் ஜெமீந்தார்கள் மற்றுமுள்ள சுரண்டும் வகுப்பினர் விலக்கப்பட வேண்டும்.

7. நிலங்களைக் குடியானவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

விவசாயம் பூராவும் கூட்டுறவு முறையில் தேசப் பொதுவாகநடக்க வேண்டும்.

9. குடியானவர்கள் தொழிலாளர்களின் கடன்கள் தீர்க்கப்படவேண்டும்.

10. அவரவர் தேவைக்கு ஏற்றவாறு பொருளாதாரத்துறையில் பலன்களைப்பகிர்ந்துகொள்ள வேண்டும். தொழில் செய்வதை அடிப்படையாகக் கொண்டு ஸர்வத்ர ஓட்டுரிமை வழங்க வேண்டும்.

பாமர ஜனங்களிடையே கட்டுப்பாடு உண்டுபண்ணி அவர்களுடைய செல்வ நிலை உயரவழி தேடுவதே அவ் வியக்கம் முன்னேறச்செய்ய வழி; காங்கிரஸ்காரர்கள் ஆங்காங்கு கிஸான் மஸ்தூர் சங்கங்கள் அமைத்து அவற்றின் மூலம் குடியானவர்களின் அன்றாடக் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய உழைத்து அவர்களுடைய முடிவான லட்சியம் கைகூடச் செய்ய வேண்டும்.

2வது தீர்மானம்

காங்கிரசுக்குள் அகில இந்திய அபேதவாதக்கக்ஷி யொன்றை ஸ்தாபிப்பதற்கு காலம் வந்து விட்டதாக இம்மாகாநாடு அபிப்ராயப்படுகிறது' இந்தக்கட்சிக்கு வேண்டிய அமைப்பு விதிகள் நகல் திட்டமுதலியவை தயாரிக்க அடியிற்கண்டவர்களடங்கிய ஒரு கமிட்டியை நியமிக்கிறது ஆச்சாரியார்நரேந்திரதேவர் தோழர்கள் ஜெயப்பிரகாச நாராயணன் (காரியதரிசி) அப்துல்பாரி, புருஷோத்தமதாஸ் திரிகம்தாஸ், மசானி ஸம்பூர்ணானந்தர், ஸி. ஸி. பானர்ஜி, பரிதுல் ஹக்அன்சாரி. டாக்டர் ஆர்லோனியா, புரொபஸ்ஸர்ரங்கா அலிம் ஆலி.

மாகாணந்தோறும் காங்கிரஸ் அபேதவாத ஸ்தாபனங்களை ஏற்படுத்தவும் அடுத்த காங்கிரஸ்மகா சபை கூடுமுன் அகிலஇந்திய அபேத வாதிகள் மகாநாடு கூட்டி அபேதவாத கட்சியை அமைத்து விடவும் தோழர் ஜெயபிரகாச நாராயணனுக்கு அதிகாரம்கொடுக்கிறது.

3வதுதீர்மானம்.

ஜவகர்லால்

பண்டித ஜவகர்லால் நேருவுக்கு இம்மகாநாடு பிரியத்துடன் ஆசி கூறுகிறது. அபேதவாதிகளுக்கு அவர் வழிகாட்டியதன் மூலமாக செய்துள்ள பெரிய ஊழியத்தை இம்மகாநாடு பாராட்டுகின்றது. அவருடைய யோசனையின்றியமையாதிருக்கும் சந்தர்ப்பத்தில் அவர் நம்மிடையே இல்லாது பற்றி மகாநாடு வருந்துகிறது.

4வது தீர்மானம்

கிரிதியிலுள்ள ரயில்வேநிலக்கரி சுரங்கத்தில் சம்பளப்பிடித்தத்தை நிறுத்திவிடும்படி தங்களுடைய கிரமமான கோரிக்கையை தெரிவிப்பதற்காக சாத்வீகமாகக் கூடியிருந்த தொழிலாளர் மீதுபோலீசார் அநீதிமாகத் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததை இம்மகாநாடு கண்டிக்கிறது .

5வது தீர்மானம்.

பம்பாய் நெசவாலைத் தொழிலாளரின் வாழ்க்கைஸ்தஸ்தைக் குறைப்பதற்காக முதலாளிகள் செய்யும காரியங்களை எதிர்த்து வீரத்தனமாகத் தொழிலாளர் நடத்தும் போராட்டத்திற்கு இம்மகாநாடுஆதரவளிக்கின்றது. தொழிலாளத்தலைவர்களைக் கைதுசெய்தும், விசாரணைக்குக்கொண்டுவராமல் அடைத்துவைத்தும், யாதொருஆர்பாட்டமும் நடத்தமுடியாதபடி நிர்பந்தம் ஏற்படுத்தியும் கவர்மெண்டார் தொழிலாளருக்கு விரோதமாக ஒரு தலைப்பக்ஷமாக நடத்தி வருவதையும் தடியடி துப்பாக்கிப் பிரயோகத்தையும் இம்மகாநாடு கண்டிக்கிறது.

ஏகமனதாகவே, எல்லா தீர்மானங்களும் நிறைவேறியது. சுயராஜ்யக்கட்சிகாலிகள் கூச்சலிட்டார்கள். உடனே அவர்கள் அடக்கப்பட்டார்கள். ஒரே ஒரு திருத்தம்தான ஓட்டுக்குவிடப்பட்டது. விரோதமாக 22ம் சாதகமாக 58 ஓட்கிடைத்தது.

வேலைநேரத்தைக் குறைக்கும் விஷயம்

வாரம் 40 மணிநேரம் வேலையை ஏற்படுத்த யோசனை

சர்வதேசத் தொழிலாளர் காரியாலயத்தினர் விடுத்துவுள்ளதொருஅறிக்கை ஜுன் 4-ந் தேதி ஜினிவாவில் கூடும் சர்வதேசத் தொழிலாளர் மகாநாட்டில் 2வது முறையாக விவாதிக்கப்பட்டு இறுதியாகப் பைசல் செய்யப்படும். 27 தேசங்களிலிருந்து இக்காரியாலத்தினரது கேள்விகளுக்குப் பதில் கிடைத்திருப்பதாகவும், ஜப்பான் ஆஸ்திரியா நெதர்லண்ட்ஸ் போன்ற பெரிய கைத்தொழிற் சாலைகள் வாய்ந்த தேசங்கள் வேலை நேரததை சர்வதேச சட்டமூலம் ஒழுங்கு படுத்துவதை ஆட்சேபிக்கின்றதாகவும் தெரிகிறது. சர்வதேச தொழிலாளர் காரியாலயம் தனக்குக்கிடைத்துள்ளபதிலைப் பரிசோத்துப்பெரும் பான்மையோர் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்காக வேலை நேரத்தைக்குறைப்பது ஒரு சாதனமென ஒப்புக்கொள்வதாகக் கண்டுகொண்டது. இதற்கு பல தேச கவர்மெண்டுகளும், முதலாளிகளும், தொழிலாளர்களும்மேன் மேலும் அதிக ஆதரவளிக்க முன் வந்திருக்கின்றனர்.

விவசாயத் தொழிலாளர்கள் கப்பல் தொழிலாளர்கள் ஆகியவர்கள் நீங்கலாகவுள்ள தொழிலாளர்களை 2 கோஷ்டியினராகப் பிரித்து வாரம் 40 மணி நேரமே வேலை வாங்க வேண்டு மென்று சொல்லியிருக்கின்றனர். இது சம்பந்தமாக 2 நகல் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

'வேலை நேர' மென்றால் தொழிலாளர்கள் முதலாளிகளிடம் வேலைக்காகத் தங்களை ஒப்படைத்துக்கொண்டுள்ள நேர மென்று அர்த்தம். இதில் ஓய்வு நேரங்கள் சேரமாட்டா. எந்தத் தொழிலாளியும் வாரம் சராசரியாக 40 மணி நேரத்திற்குமேல் வேலைசெய்யக் கூடாதென்றும், சராசரி வேலை நேரத்தை நிர்ணயிக்க 4வாரத்தில் செய்துள்ள வேலையே கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டு மென்றும்,விசேஷ சந்தர்ப்பங்களில் எவரையும் தினம் 8 மணிவரையிலோ, அல்லது சராசரி 8 மணி நேரமோ வேலை செய்ய அநுமதிக்கலாமென்றும். விடாமல் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் வாரம் 42 மணிநேரா வேலை வாங்கலாமென்றும் முதலாளிகளையும், தொழிலாளரையும் கலந்து அதிக நேரம் வேலைசெய்ய அநுமதிகொடுக்கலாமென்றும், வருஷத்தில் 60 மணிநேரமோ சிலவிசேஷ சந்தர்ப்பத்தில் 120மணிநேரமோ ஒருவரை அதிகமாகவேலைசெய்ய அனுமதிக்கலாமென்றும் அதிகப்படி நேரவேலைககு 1¼விகிதத்துக்குக்குறையாத கூலியை கொடுக்கவேண்டுமென்றும் தொழிற்சாலை சம்பந்தமான நகல் ஒப்பந்தம் கூறுகிறது- 6பேருக்கு மேற்படாத தொழிலாளரையே கொண்ட தொழிற்சாலைகளையும் முதலாளியின் குடும்பத்தினரையேதொழிற்சாலைகளிலும் இந்த ஒப்பந்தம் பிரயோகிக்கப்படாது, நிர்வாகிகள் அந்தரங்கக் காரியதரிசிகள் அந்தரங்க உத்தியோகஸ்தர்கள்- இவர்கள் விஷயத்திலும் இந்த ஒப்தந்தம் பிரயோக்கப்படமாட்டாது.

வியாபார ஸ்தலங்கள் ஆபீஸுகள் போன்ற வற்றில் வேலை செய்வதற்காக உள்ள ஊழியர்கள் சம்பந்தமாகவும் இதே மாதிரியுள்ள நகல் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருக்கின் தபால், தந்தி, டெலிபோன் சர்விஸுகளிலும் ஆபீஸ் வேலை செய்யும் நிர்வாகிகளுக்கும் இந்த ஒப்பந்தம் செல்லும். ஆனால் ஆஸ்பத்திரிகள், அநாதை ஆச்சிரமங்கள், ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் நாடகசாலைகள் உல்லாசமாகப் பொழுது போக்குதற்கான இடங்கள் முதலியன இந்த ஒப்பந்தத்திற் குள்ளாகமாட்டா.

வேலை நேரம் குறைவதால் தொழிலாளர்கள் கூலியைக் குறைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென கவர்ன்மெண்டுகள் கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் ஒப்பந்தத்துடன் ஒரு சிபார்சு சேர்க்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களும் முதலாளிகளும் வேண்டுமானால் கூலியைத் திருத்தியமைத்துக கொள்ளுவது பற்றியும ராஜி பேசிக் கொள்ளவேண்டும் இவர்கள் உடன்பாடு செய்து கொள்ள முடியாவிட்டால் இவர்கள் கூலி பிரச்சினையை நிர்ணயிக்கும் அதிகாரமுள்ளசபைக்கு இப்பிரச்சினையை விட்டு விட வேண்டும்- இப்பிரச்சினையைத் தீர்க்கும்கடமைகள் இல்லாதவிடங்களில் அவற்றை ஏற்படுத்த வேண்டும்.

இந்தியா கவர்ன்மெண்டார் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க உலகெங்கும் வேலை நேரத்தைக் குறைப்பது ஒரு வழியாகுமென்பதை ஆட்சேபிக்கவில்லை: ஆனால் நகல் ஒப்பந்தத்தை உலகெங்கும் அமுலுக்கு வரும்படி செய்யமுடியாதென இந்தியா கவர்ன்மெண்டார் தங்களது மதியில் குறிப்பிடுவதாவது :—

சணல் தொழிற்சாலைகள் மட்டும் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்காகக் குறைந்த நேரம் வேலை செய்கின்றன. மற்றெந்தத் தொழிற்சாலையும் 40மணிமணி நேரம்வேலைசெய்யவில்லை-சிற்சிலகாலங்களில் வேலைசெய்யும் தொழிற்சாலைகளில் பெரும்பான்மையானவை வாரம் 60வதுமணி நேரம் வேலைசெய்து போதிய கூலியைபெறக்கூடிய அளவுக்கு இந்தியத்தொழிலாளர்கள் அடையவில்லை - வருஷம் முழுதும்வேலை செய்யும் தொழிற்சாலைகள் தினம் 11மணிநேரப்வேலைசெய்கின்றன. அல்லது வாரம் 60மணி நேரம் வேலை செய்கின்றன ஆனால் புதிய தொழிற்சாலை மசோதாவானது தினம் 10மணிநேரம் அல்லது வாரம் 54மணி நேரம்வேலைசெய்ய வேண்டுமென்று கூறுகின்றது. இந்தமசோதா விட்லிகமிஷன் சிபார்சை ஆதாரமாகக் கொண்டு இருக்கிறது

(6ம் பக்கத்தொடர்ச்சி)

வேலைசெய்யவேலையுண்டு.மக்களுக்கு வேண்டிய உணவு, உடை, முதலியவைகளைப்பற்றி அவர்கள் எவ்வித கவலையும் படவேண்டுவதில்லை. குழந்தைகள் வயது சென்றவர்கள் முதலானவர்களுக்கு சகல சௌகரியங்களும், சகலவசதிகளும் செய்து கொடுக்கப்படும். கல்வி எல்லோரும் கற்க நாடெங்கும் கல்விச் சாலைகள் நிறுவப்படும். தங்குவதற்கு வீடின்றியோ, கட்ட துணியின்றியோ, உண்ண உணவின்றியோ சினிமா, டிராமா கண் காட்சி சாலைகள், முதலியவை, களைப்பார்க்க முடியாது இன்று பெரும்பான்மை மக்கள் கஷ்டப்படுவது போன்ற நிலைமை இருக்காது. இந்த ஆட்சியில்தான் மனிதர்கள் மனிதர்களாக வாழ்வார்கள். உழைக்காத சோம்பேரிக்கு உணவில்லை என்பதைமட்டும் மறந்துவிடக் கூடாது. சுருங்கக்கூறுவிடத்து தனிசொத்துகள்யாவும், சமதர்ம ராஜ்யத்தில் பொதுசொத்தாக மாற்றப்படும். எவ்வித வேலைநிறுத்தமோ, கதவடைப்போ பசி பட்டினியால் வாடி தற்கொலை புரிந்து கொள்வதோ அதிக நேரமுழைப்பதோ சமதர்ம ராஜ்யத்தில் காண முடியாது. தற்கால ராஜ்யத்தில் மனிதனை ஆண்டுவருகிறார்கள். ஆனால் சமதர்மராஜ்யத்தில் விளைபொருளும் செய்பொருளும ஆளப்படுமென அறிக. சமதர்மத் தோழர்களே! அந்தஆட்சியை அடையசலியாது உழைமின்! வெற்றி நமதே.

(நாகை கே. முருகேசன்)

3-ம் பக்கத் தொடர்ச்சி

தல்.

(8) நூறு சோஷலிஸ்ட் லீக்குகள் உண்டானதும், ஒரு மத்திய சங்க மொன்று முக்கிய பட்டணத்தில் கூட்டி,இந்த லீக்குகளை பரிபாலித்துவர விதிவிலக்குகளை உண்டாக்குதல்.

(9) இந்த சோஷலிஸ்ட் லீக் பூரண அரசியல் சம்பந்தமான வேலைகளில் தான் உழைக்கும், ஜாதி மத முதலிய சமூக சீர்திருத்தங்களில் தற்போது தலையிடாது.

(10) இந்த விஷயங்களை ஆலோசிக்க நாளும், இடமும் புரட்சியில் அறிவிக்கப்படும்,

இந்த லீக்குகளில் சுயமரியாதை யோரும், சமதர்மிகளும், பகுத்தறிவோரும் சேர்ந்து உழைக்கலாமாதலால், அவரவர்கள் செய்து வரும சமூக திருப்பணியில் இந்த சோஷலிஸ்ட் லீக் திருப்பணியை முதன்மை யென்றுணர்ந்து, தொழிலாளர் கிருஷிகளை கைதூக்கிவிடுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

இது சம்பந்தமான நமது அபிப்பிராயத்தை சமீபத்தில் எழுதுவோம் ப-ர்.

சுயமரியாதைத் திருமணம்.

27- 5. 34 ஞாயிற்றுக்கிழமை காலை மணிக்குமேல் 7மணிக்குள்ளாக அரக்கோணம் கவால் பேட்டையில் ரத்தின முதலியார் குமாரர் அரக்கோணம் மளிகை தோழர் கே. ஆர். நடேசனுக்கும் வானியம்பாடி எஸ். வையாபுரி குமாரத்தி தோழர் மோகனம்பாளுக்கும் திருமண ஒப்பந்தம்நடைபெறும்

அதுசமயம் தலைமை வகிக்க ஈ. வெ. ராமசாமி அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றும் தோழர்கள். எஸ். குருசாமி, எஸ் குஞ்சிதம், கே. வி. அழகர்சாமி, வி. பார்த்தசாரதி, நாஸ்திக சி. கே. குட்புசாமி எ. ரெத்தினசபாபதி, முதலியோரும் சொற்பொழிவுகள்நிகழ்தத அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

விரோதமாகச் செல்லுவானுகில்
அவன் உண்ண உணவின்றி இறப்
பது நிச்சயம். ஏனெனில் அவனை
ஒருவருமே வேலைக்குக் கூப்பிடமாட்
டார்கள். அவன் பணம் வைத்திருப்
பின் ஓர் தொழிலாளி இல்லாதவ
னைப்போல் சாமன்களை அதிக விலை
கொடுத்து வாங்குவதினுல் அப் பண
மெல்லாம் சிலவழிந்துவிடும். யாரா
வது ஒருவன் நடுத்தர ஜாதியைச்
சார்ந்தவனது வேலையைச் செய்தால்
அதாவது சரசமாகச் சாமான்களைக்
கிராமங்களில் வாங்கிவந்து பட்டண
ங்களில் அதிக விலைக்கு அவைகளை
விற்பதினுல் கிடைக்கும் லாபத்தை
அடைகின்றவரை, தண்டனைக்குட்
படுத்திக் கடூரமாகச் சிட்சை செய்
யப்படும்.

நாங்கள் உள்நாட்டுச் சுற்றுப் பிர
யாணிஆபீஸ் எதிரே வந்து கண்ணடி
கதவைத் தள்ளி உள்ளேசென்ருேம்.
அதற்கு "பிரமிலாகிங்டம்" என்ற
பெயர், அங்கே பெண்கள் மட்டும்
தான் இருககின்றனர். ஓர்ஆண் குமா
ஸ்த்தாவையாவது நான் கண்டேனில்
லை. எல்லோரும் பெண்களாகவே
இருந்தனர். நான் உடனே எனது
வழிகாட்டியைப்பார்த்து "நல்லதுநீங்
கள் ஆண்களை ஆபீஸ் உத்தியோகம்
செய்ய வேண்டாமென்று விரட்டி வி
ட்டீர்களா" என்று கேட்டேன்,
அதற்கு அவள் சரிதான் அவர்கள்
பலமுள்ள வேலைகளை செய்யவேண்
டும் எல்லா ஆண்களும் தொழிர்சாலை
களிலேயே வேலை செய்கின்றனர்.
ஆகையால் இத்தகைய சுலபமான
வேலைகளை யெல்லாம் நாங்கள் செய்
யவேண்டும் என்று பதிலளித்தாள்
நீங்கள் இப்போது உயர்ந்த வகுப்பின
ராகவும், ஆனுல் ஆண்கள் கீழ்த்தர
வகுப்பினராகவும் உள்ள னரே என்
றுசிறித்துக்கோண்டே கூறினேன்
ஆனுல் நாங்கள் கடினமான வேலை
யைக்கண்டு பயப்படுவதில்லை இத்
தேசத்தில் பெண்கள் உழைப்பாளிக
ளாகவும் இயந்திரங்களை ஓட்டுபவர்
களாகவும் இராணுவ வீரர்களாகவும்
கப்பலில் சென்று அயல் நாட்டு அர
சாங்கத்தினுடன் வியாபார விஷய
த்தை கவனிக்க செல்பவர்களகவும்
இருக்கின்றனர். எங்களது திரேக
நிலமையை முன்னிட்டு நாங்கள்
எந்தவேலையாவது செய்கின்ருேம்.
ஆனுல் நாங்கள் வேலைசெய்ய வேண்
டுமென்று பயப்படுவது கிடையாது
என்று அவள் என்னைமறுத்துப் பேசி
ஞள்.

இது உணமையே டிராம் வண்டி
ஓட்டுபவர்களும் அதனை நடத்தி
வைப்பவர்களும் பெண்களாகவே இ
ருந்தனர். ரஷியாதேசத்து டிராம்
வண்டியைபபார்க்க விகாரமாக இரு
க்கின்றது. ஓர் அங்குலம் இடங் கூட
விணேவிடாமல்படி எல்லாவிடத்தி
லும் ஜனங்கள் நிறைந்து இருகின்ற
னர். சுமார் ஐந்திலிருந்து ஏழுபிரயா
ணிகள் வரையில் எப்போதும் கீழே
பரதம் மிதிக்கும் பலகையில் தொங்கி
க்கொண்டும் இரும்புக்கைபிடிகளை
பிடித்துக்கொண்டும் இருக்கின்றனர்.
வண்டிகள் நிற்கவேண்டிய இடஙக
ளில் சிறிது நேரமே நிற்கிறது பிர
யாணிகள் ஏறினுர்களோ அல்லது
இறங்கினுர்களோ என்றதைப் பற்றி
அவைகளுக்கு கவலை இல்லை ஒருவன்
சிறிது கஷ்டத்துடன் டிராம் வண்டி
யில் ஏறிக்கொள்ள வேண்டும் ஆனுல்
முதன் முதலில் அவன் தனது ஓர்
காலை படிமீது வைத்து தொங்கிக்
கொண்டு சேல்லும் போது சிறித
இடத்தைப்பிடித்துக்கொள்ள வேண்
டும். பிறகு மெதுவாக பின்னுக்கும்,
முன்னுக்கும்தள்ளுவதின்தனதுமுயற்
சியினுல் அவனுக்கு யேடையில் சிறி
துஇடம் கிடைக்கக் கூடும். உள்ளே
இரண்டு வரிசை பென்சுகள்தான்
இருக்கின்றன ஒவ்வொன்றும் ஓர்மனி
தன் தான் தாராளமாக உட்காரும்
படியாக அகலமுள்ளதாக இருக்கின்
றது.டிராம் வண்டிகள் நின்று பிரயா
ணம்செய்யவே இருக்கின்றது ஆனுல
உட்காருவதற்காக வசதி கொடுப்ப
னவைகள் அல்ல ஜன்னல்கண்ணடி
களெல்லாம் கடுமையான பனியினுல்
மூடப்பட்டு இருந்தது தத்தம் இடங்
களைபபார்க்க ஆவலாக இருக்கின்ற
பிரயாணிகளின் விரல்கள் கண்ணடி
யின் மீதுபட அவைகளில் மத்தியில்
சிலவடிவமான இடைகள் உண்டா
யின ஏதாவது ஒன்றை எடுக்கவே
ண்டி இருப்பின் உடம்பை வளைக்க
முடியாது இது பற்றிய சத்தர்ப்பத்
தை நான் அறிவேன் ஓர் பிரயாணி
வண்டியை விட்டு நீங்கு முன் என்
னுடைய ஓர் பாதரக்ஷயை இழந்து
விட்டேன் இப்போதுதான் எனது
காலிலிருந்து நழுவிவிழுந்துவிட்டது
என்று கத்தினுன் ஒல்வெருவரும்
தலையைகீழேவளைத்தனர் ஆனுல்ஒரு
வராவது தைரியமாக அதைதேடிஎடு
க்க முடியவில்லை ஏனெனில் ஒவ்
வெருவரும் நகரமுடியாவல் படிசூழ்
ந்து நின்றனர் அந்த பிரயாணி ஓர்
பாதரக்ஷயுடன் கீழே இரங்கி செ
ல்ல வேண்டியதாயிற்று, ஒன்றுபட்
டும் என்னை ஆச்சரியப்படுத்தியது
ஜனங்கள் அதிக ஏழையாக இருந்த
போதிலும் கூடஒருவராவது கண்ட
க்டருக்கு பணம் கொடுக்காமல்தடி
அவனை ஏமாற்றிச் செல்ல விரும்பு
வதே கிடையாது அவ்வாறு செல்லா
லாமல் ஒருமூலையிலிருந்து மற்ருே
ருமூலைக்கு கண்டக்டரிடத்தில் பண
ம்போய் சேருமாறு பக்கத்திலுள்ள
பிரயாணி யிடத்தில் கொடுக்க அவர்
மற்ருெருவரிடத்தில் கொடுத்தது கட
சியாகா அவனிடத்தில் அப்பணம்
போய் சொர்ந்துவிடும் அவர்களுக்கு
டிராம் வண்டிகள் தங்களுக்கு சொ
ந்தமான.வைகளென்று தெறிந்திருப்
பினும் கூட அதற்கு பணம் கொடுப்
பது என்பது தத்தம் கடமை யெ
ன்று ஒவ்வொருவரும் கருதுகின்ற
னர் நீதியுள்ள தேச மென்று தற்புக
ழ்சி செய்துகொள்ளும தேசங்கள்
ஏழை ரஷ்ய தேசத்தின் மனிதர்
களின் நற்குணங்களை கற்றுக்கொ
ள்ளவேண்டியது அவசியமாகும் யாரா
வது ஒருவன் ஓர் குறிப்பிட்டயிட
த்திலிருந்து வண்டி இரண்டு அல்
லது மூன்று தடவை நிற்த முன்ன
தர அவன் வெளிய வரமுயல வேண்
டும் மழைகாலத்தில்இத்தகைய கூட்
டம் இராது ஆனுல் கோடைகால
த்தில் எவ்வாறு இருக்கு மென்பது
கடவுளுக்குத்தான் தெரியும்.

டிராப்வண்டியில்வரும்போது என்
னுடையவழிகாட்டி "தொழிலாளி
களின் குழந்தைகளைப்போஷிக்கும்வீ
டு"என்றுகூறியதால் நாங்கள்"கிரீச்"
என்ற வைத்தியசாலையின் சமீபத்
தில் இறங்கினேம். நாங்கள் இருவ
ரும் ஆடையுடுத்தும் அறைக்குச்
சென்று கோட்டையும் மற்ருெரு
பாதரக்ஷயும் காலில் அணிந்து கொ
ண்டு மேல் மாடிக்குச் சென்ருேம்.
அங்கே உள்ளேவிட உத்திரவு கொ
டுக்கவேண்டியவருடைய ஸ்தானத்
தை வகித்தது ஓர் பெண்ணேயாகும்.
அவளை எனது வழிகாட்டி எங்களை
உள்ளேவிட உத்திரவு கேட்டாள்.
அவள் புன்சிரிப்புடன் ஒத்துக்கொ
ண்டதும் நாங்கள் குழந்தையின்
அறைக்குச் செல்லுவதற்கு முன்
பால் நிறமுள்ள துணியை மேலே
அணிந்து செல்லுமாறு எங்களை வே
ண்டிக்கொண்டனள். இந்த வீட்
டில் மூன்று மாதத்திலிருந்து மூன்று
வருடம் வரையில் குழந்தைகள்
வளர்க்கப்படுகின்றன. வேலையிலு
ள்ள தாய்மார்களுக்கு சம்பளத்து
டன் பிரசவத்திற்கு முன்னே ஓர்
மாதம் விடுமுறையும் பின்னே இர
ண்டு மாதம் விடுமுறையும் கொடுக்
கப்படுகின்றது. பிரசவமான முன்
ரும் மாதம் அவர்கள் வேலைக்குச்
செல்லவேண்டும். ரஷியாவில் குடு
ம்பத்தை ஒழித்துவிட வேண்டுமெ
ன்று முயர்ச்சித்ததில் வெகு தூரம்
வெற்றிகரமாகவே முடிந்தது. தற்
போதும் அவ்வாறு முயற்சித்து வரு
வதில் இத்தகைய குழந்தைகளைப்
போஷிக்கும் இல்லங்களில் சிறிய
மூன்று மாதத்திய குழந்தைகளை
நன்கு கவனிக்க வேண்டிய அவசியம்
ஏற்பட்டு வருகின்றது. ரஷியதொ
ழிலாளிகள் கடினமான வேலை செய்
கின்றபடியால், இயந்திரங்கள் 24
மணிநேரம் வேலை செய்யக்கூடும்.
ஒவ்வொரு தாயும் தொழிற்சாலைக்கு
ச்செல்லுவதற்கு முன்னரே தனது
குழந்தையை இந்த இடத்தில் விட்
டுச் செல்ல, அங்கே குழந்தைகளை
மிக ஜாக்கிரதையாய் கவனிக்கப்படு
கின்றது. தாய் வேலையிலிருந்து
திரும்பி வந்தவுடன் குழந்தையைத்
தனது வீட்டிற்கு எடுத்துச் செல்லு
வாள். ரஷியாவில் வீட்டின் இன்ப
வாழ்வே கிடையாது என்று சொல்
லுபவர்கள் அநேகம் உளர். குழந்
தைகளை அரசாங்கத்தினுல் கவனிக்
கப்பட்டு வருகின்றமையால் தாய்
மார்கள் தத்தம் குழந்தைகள் மீது
ள்ள கவலையை அவர்கள் இழந்துவிடு
கின்றனர். கல்யாண விஷயத்தைப்
பற்றிய சட்டங்கள் ஒன்றும் கடுமை
யாக இல்லாமையால், தந்தைமார்
கள் குழந்தைகளைப்பற்றி கவனிப்
பது கிடையாது. ஆனுல் உண்மை
யில் இவையெல்லாம் பொய்யே யா
கும்.

இந்தக் குழந்தைகளை போஷிக்
கும் இல்லங்கள் தாய் மார்களை தமது
குழந்தைகளை காப்பாற்றும் தொல்லை
யிலிருந்து விடுவிக்கின்றன. இவ்
வாறு அவர்களை தம்மால் இயன்ற
மட்டும் அரசாங்கத்திற்கு உழைக்க
இடம் தருகின்றன. இவ்வாறே
போல் முன்னர் வீணே திரேக கஷ்
டப்பட்டுள்ள தேசத்தின் பேர்பாதி
மக்களை தொழிற்சாலையிலுள்ள பொ
து சமயலறையும், பொது வண்ணா
க்கடைகளும ஜாதி வீடுகளுமேதான்
காரணமாக இருந்து மீட்டன. முற்
காலத்தில் ஒவ்வொரு குடும்பங்களி
லும் பெண்கள் குழந்தைகளைப் போ
ஷிக்கவும், சமைப்பதிலும். துணி
களை வெளுப்பதிலும், சுத்தம் செய்வ
திலும், இன்னும் வீட்டுக் காரியங்
களைக் கவனிப்பதிலேயே தமதுவாழ்
நாளைப் போக்கினர்கள். இப்பொ
ழுது நகரங்களிலுள்ள சிறிய அளவி
லுள்ள குடும்பங்களைப் போக்கிஅவை
களைப் பெரிய குடும்பங்களாகச் செய்
யப்பட்டுள்ளன- அந்தப் பெரிய
குடும்பங்களைச் சார்ந்தவர்கள் சாதி
வீடுகளில் வசிக்கின்றனர். ஒரே
சமயலறையில் சமைத்த சாப்பாட்
டை உண்ணுகின்றனர். அவர்களது
ஆடைகள் யாவும் ஒரே துணி வெளு
க்கும் கடையில் சுத்தம் செய்யம்படு
கின்றன. அவர்களுக்கு படிக்க
ஓர் வாசகசாலையும் எல்லாம் சந்திக்க
ஓர் கிளப்பும் உள்ளது. இந்நாட்டின்
புகழ் ஒரு வேளை இனிவரப்போகும்
எத்தகைய ஆயிரத்திற்கு மேல்பட்ட
ரஷியப் புரட்சியினுலும் அழிக்க
முடியாது. இத்தத்துவங்கள் இந்
நாட்டை விட்டு எக்காலத்தும் அக
லாது. இத்தன்மை அவர்கள்உடன்
பிறந்துள்ளது. இவைகள் அத்தேச
த்து பறவைகளிடத்திலும், மிருகங்
களிடத்திலும் அமைந்துள்ளது.
ஆகையால் குடும்ப வாழ்க்கையை
இங்கே ஒருக்காலமும் இழக்க முடி
யாது. ஆனுல் ரஷியாவில் குடும்ப
வாழ்க்கை இதர தேசத்திலிருந்து
மற்ற ஓர் வடிவத்தை எடுத்துக்கொ
ண்டது என்பது உண்மையேயாகும்.
இது அரசாங்கத்தின் பொருளாதார
த்திட்டத்தை முன்னிட்டே ஆகும்.
நாள் முழுதும் குழந்தைகள் அவர்
களைப் போஷிக்கும் இல்லத்தில்
தான் இருக்கின்றன். குழந்தைக
ளுக்கு ஆகாரம் கொடுக்கவேண்டி
தாயாருக்கு ஒவ்வொரு நாளும் ஒரு
மணிநேரம் லீவ் கொடுக்கப்படுகி
றது. அன்றைய தினத்தின் வேலை
முடிந்து வீடு திரும்பும்போது, அவள்
குழந்தையை எடுத்து தனது மாரில்
அதிக அன்புடன் அணைத்து முத்த
மிடுவாள். பிறகு குழந்தையை
மெல்லிய பஞ்சு மெத்தையில் மூடி,
தன் கணவனுடன் குழந்தையின்

இன்பந்துய்க்க வீட்டிற்கு எடுத்துச் செல்வாள். நான் இந்த இல்லத்தில் அநேக வாலிபப் பெண்களும், வயதான பெண்களும், தத்தம் குழந்தையினுடன் கொஞ்சிக் குலாவுவதையும், அடிக்கடிமுத்தமிடுவதையும் மாரில் அணைத்துக்கொள்வதையும் கண்டேன். குடும்ப வாழ்க்கை இத்தகைய அன்புமிக்க தாய்மார்கள் கையில் உள்ளபோது, குடும்ப வாழ்க்கை இங்கே எவ்வாறு இல்லாமற் போக முடியும்? ரஷ்யாவில் தாய் பருவத்திலுள்ள மனப் பான்மையுங் கூட இதர ஐரோப்பிய தேசத்திற்கும் அல்லது அமெரிக்கா தேசத்திற்கும் வித்தியாசப்படுகின்றது, குழந்தைகள் ஒன்றும் தமக்கிருக்கக் கூடாதென்ற விருப்பத்துடன் கல்யாணஞ் செய்துகொள்வது நியாயமல்லவென்று ரஷ்யப் பெண்கள் கருதுகின்றனர். குழந்தைகள் யாவும் அரசாங்கத்திற்குட்பட்டவையேயாகும். அரசாங்கத்திற்கு திரேகபலமுள்ளதாகவும், வீரத்தன்மை பொருந்தின குழந்தைகள் இன்னும் பெற்றுக்கொடுக்க வேண்டியது அவர்களது கடமையாகும். அரசாங்கம் டாக்டர்கள் மூலமாக கருவை அழிப்பது நியாயமென்றும் ஜனங்களுக்குக் கற்பிக்கும்படி உத்திரவு செய்துள்ளது. ஆனால் அனுவசியமாகக் குழந்தைகள் வேண்டியதில்லை யென்றும், தாய்மார்களின் திரேக ஆரோக்கியத்தைக் கவனிக்க வேண்டுமென்ற எண்ணத்தினால் தான் கற்பத்தடை அவசியமென்று ஏற்பட்டது.

ரஷியர்கள் விசாலமான மனப்பான்மையும் குழந்தைகளைப் போஷிக்கும் இவ்வில்லம் மிகவும் சுத்தமாய் இருந்தது. ஒவ்வொன்றும் சரியாக வைத்த இடத்திலேயே இருந்தது. முக்கியமாக அங்கே ஒழுக்கமே தலை சிறந்து ஓங்கிற்று. முதன் முதலில் அநேகபீரோக்கள் நிறையப்பெற்ற ஓர் அறைக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள்.

(மாடன் ரிவியூவில் நித்யநாராயன பார்ஜி எழுதியது)

வேலூரில் சுயமரியாதை சங்கம்

வேலூரில் சுயமரியாதை தோழர்களில், சிலருக்கு இவ்வூரில் ஓர் சுயமரியாதை சங்கத்தை ஸ்தாபித்து இயக்கக் கொள்கைகளைப் பரவச் செய்யவேண்டுமென்கிற எண்ணமிருந்தும், சிற்சில சந்தர்ப்பங்களால் இதுகாறும் காலதாமதமாய் கொண்டே வந்தன. ஆயினும் தற்போது இரண்டொரு தோழர்கள், எடுத்துக்கொண்ட பெருமுயற்சியினால் வேலூர் தோட்டப்பாளையம் ஒற்றை வாசைக் கட்டிடமேல் மாடியில் சென்ற 13-5-34, ஞாயிறன்று ஸ்தாபிதம் செய்துள்ள ''பகுத்தறிவு'' சங்கத்திற்கு அருகாமையில் இன்று 16-5-34ல், சுயமரியாதைச் சங்கமொன்றை ஸ்தாபனம் செய்து சங்க நிர்வாகஸ்தர்களையும், தேர்ந்தெடுத்தது டன் இயக்கக்கொள்கைகளை கிராமாந்திரங்களில் பரவச்செய்வதற்கான சில திட்டங்களையும், வகுக்கப்பட்ட பின்னர் சிற்றுண்டிகள் தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

(சங்க நிர்வாகிகள்)

தலைவர்:—எம். நாராயணசாமி.
காரியதரிசி:—ஆர். எஸ். சுப்பிரமணியம்.

(கமிட்டியார்)

எஸ். தங்கவேலு.
வி. வி. சீனிவாசன்.
சி. கோவிந்தராஜு.
எல். குப்பிசாமி.
டி. கோவிந்தன்.
எஸ். முனிசாமி.
வி. கே. சுப்பிரமணியம்.

இப்படிக்கு காரியதரிசி
ஆர். எஸ். சுப்பிரமணியன்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

டமிருந்துதான் வாங்கவேண்டுமென்று இப்பொழுது மாற்றி விட்டார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் நீங்கலாகவுள்ள மற்ற பிற்போக்கான வகுப்பைச்சேர்ந்த மாணவர்களுக்கும், எல்லா சமூகங்களையும் சேர்ந்த மாணவிகளுக்கும் இந்த அத்தாட்சிப் பத்திரம் தாசில்தார், சப்மாஜிஸ்திரேட், தாலூகா போர்டு தலைவர் ஆகியவர்களில் ஒருவரிடமிருந்து வாங்கினால் போதும் என்றிருந்ததை டிப்டி கலெக்டர், அல்லது ஜில்லா போர்டு பிரசிடெண்டிடமிருந்து தான் வாங்க வேண்டுமென்று மாறி விட்டார்கள். இந்தக்காலத்தில் தாழ்த்தப்பட்டவர்களும், மற்றவர்களும்முறையே தாசில்தாரிடமும் சென்று இந்த அத்தாட்சிப் பத்திரம் வாங்குவது எவ்வளவு கஷ்டம் மென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதனால் அநேக பிள்ளைகள் இந்த அத்தாட்சிப் பத்திரம் வாங்க முடியாத கஷ்டத்தினாலேயே படிக்க முடியாமல் போய் விடுவார்கள், ஆகவே இந்த இரண்டு வகையிலும் சர்க்கார் செய்திருக்கும் சிக்கனமே போதுமானதாகும் 100க்-கு ஏழரை விகிதம் என்ற நிபந்தனை ஏற்படுத்தத் தேவையில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(8) இனி இந்த உத்திரவினால் ஏற்படும் கஷ்டங்களினிறும் தப்பித்துக்கொள்வதற்கு என்ன வழியென்று பார்ப்போம். இதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது சென்னை சர்க்காரின் 6-1-34 தேதி குறிப்பிட்ட 47நெ. உத்திரவை உடனே ரத்து செய்வதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டியதாகும்.

இந்த உத்திரவானது இவ் வருஷம ஜூன் மாதம் முதற்கொண்டே அமுலுக்கு வருகிறபடியால் பெண் மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்போக்கான வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியவர்களின் கல்வி அபிவிருத்தியில் ஆர்வமுள்ள சட்டசபை அங்கத்தினர்களும், பொது ஜனத்தலைவர்களும இவ் விஷயத்தில் வேண்டிய முயற்சி யெடுத்துக்கொண்டு ஆவன செய்வார்களென நம்பப்படுகிறது.

"புரட்சியின் மூலமே இரட்சிப்பு"

(கொழும்பு தோழர் ஏ. எல்- முஹம்மத் தமீம்)

(ஆடுவோமேஆடுவோமே என்ற மெட்டு)

இராகம் நாகவராளி—தானம் ஆதி.

ஓங்கவேண்டும் ஓங்கவேண்டும்—இனி
உலகில் பெரும் ''புரட்சி'' ஓங்க வேண்டும் (ஓங்)

தாங்முடியாத கடும் வருமைதனை—நாம்
தரணியிலகற்றி வாழ்ந்திடவே! (ஓங்)

ஜாதிமதங்களை எல்லாம் மறந்து—தூய
சமதர்ம வாழ்க்கையிலே சிறந்து—இந்த
மேதினியிலினி நாமிருந்து—உண்மை
விமோசனத்துடன் வாழ்ந்திடவே! (ஓங்)

மூடநம்பிக்கையில் நாம் வைத்தபாசம்—இன்று
முன்னேற்றமின்றி தவிக்கும் மோசம்—இனி
ஈடேறும் சமதர்மவாழ்வில் நேசம்—வைத்து
இன்பமுடன் நாம் வாழ்ந்திடவே! (ஓங்)

இதுகாறும் பட்ட துன்பம் எல்லாம் ஒழிந்து—நாம்
இனியேனும் இன்ப வாழ்வைபடுத்து—நல்ல
'பொதுவுடமை' யாம் செங்கோல் பிடித்து—இந்தப்
பூவுலகில் நாம் வாழ்ந்திடவே! (ஓங்)

மதப்பித்தர்கள் செய்யும் வெளிவேஷம்—தனை
மக்கள் கண்டு போனார் மோசம்—இனி
வதர்ப்பமற்று எல்லோரும் நேசம்—கொள்ள
வேண்டும் சுகமாய் வாழ்ந்திடவே! (ஓங்)

பசியால் மடியுமக்கள் பரிதாபம்—கண்டு
பாரிலகற்றுதற்கு அநுதாபம்—கொண்ட
ரசியத் தோழர் லெனின் அனுபோகம்—சொல்லும்
ராமசாமி புகழேந்திடவே (ஓங்

பகுத்தறி வாலிதைப்பார்த்திடுவோம்—நாம்
பாரில் படுந்துயரம் தீர்த்திடுவோம்—நல்ல
சுகத்தை எல்லோருக்கும் அளித்திடுவோம்—உண்மை
சொல்லும் தமீம்கவி உணர்ந்திடவே (ஓங்

அஸ்திவாரக்கல் நாட்டுவிழா.

1934-௵ மே-௴ 25-தேதி மாலை 5 மணிக்கு, கோயமுத்தூர் ஸ்ரீ சாரதாமில்ஸ், லிமிடெட் அஸ்திவாரக் கல் நாட்டுவிழா, லெஜிஸ்லேடிவ் அஸெம்ப்ளி பிரசிடெண்ட் கனம் ஸர். ஷண்முகம் K. C. I. E. அவர்களால் போத்தனூருக்கு அடுத்திருக்கும் மில் இடத்தில் நடைபெறும்.

இங்ஙனம்,
வி. எஸ். செங்கோட்டையா அன் பிரதர்ஸ்,
மானேஜிங் ஏஜண்ஷி

ரோஜா முத்தையா

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

விலை அணு 8.

லெனினும் மதமும்.

இது பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணு 4.

பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.

விலை அணு 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைம்பிய நூல். விலை அணு 4.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.

விலை அணு 8.

இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பாலகாண்டம் அணு 4.

அயோத்தியாகாண்டம் அணு 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணு 4.

தர்ம பரீக்ஷை.

இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணு 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.

விலை அணு 3.

பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணு 4.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணு 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைபற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 2.

கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணு 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு, தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

விலை அணு 3.

நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணு 3.

புததகங்கள் வேண்டு[illegible] [illegible]க்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடு[illegible]

பகுத்தறிவு [illegible]

[illegible]

பகுத்தறிவு.

சுயமரியாதை தினசரி.

சமய சமூக அரசியல் விடுதலைக்கு பரிந்து போராடும் தமிழ் தினசரி இது ஒன்றே. சர்வ தேசசம்மந்தமான விடுதலைபோராட்டச்செய்திகள் உடனுக்குடன் தெரிவிக்கப்படும். ஆணித்தரமான அபிப்பிராயங்களும், அழுத்தமான கண்டனங்களும், அவசியம் காணலாம்.

எங்கும் கிடைக்கும்.

தனி இதழ் காலணா.

தபாலில் மாத சந்தா ஒரு ரூபாய்.

ஆறு மாத சந்தா ரூ. 5.

வருட சந்தா ரூ. 9.

விலாசம்:— மானேஜர்,

"பகுத்தறிவு" ஈரோடு.

Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.